வருடாந்த அறிக்கை

2019/20



வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

இலங்கையின் விவசாயிகளை பாதுகாத்தல்

இலங்கையின் விவசாயிகளை பாதுகாத்தல்

எமது உலகம் முன்னெப்போதும் இல்லாத நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் காலம் இது. உலகலாவிய ரீதியில் விஞ்ஞானிகளின் கணிப்புகள் அவ்வளவு சிறப்பாக இல்லை. உலகம் முழுவதும் தற்போது பரவியுள்ள இத்தொற்றுநோயானது ஒரு கெட்ட சகுனமாக சிலரால் கருதப்படுகிறது. அதற்கேற்ப, வழக்கமான வாழ்க்கை முறை, சமூக விழுமியங்கள் மற்றும் இருக்கும் அனைத்தும் வீழ்ச்சியடைவதற்கான ஒவ்வொரு சாத்தியமும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அவ்வாறான நெருக்கடிமிக்க சூழ்நிலையில் தமக்கென்றே உற்பத்திச் செய்யும் தன்னிறைவு கொண்ட தன்னிச்சையாக முகம்கொடுக்க்கூடிய நாட்டுக்கு அல்லது தேசத்திற்கே ஆகும். இலங்கை அதற்குத் தேவையான அடிப்படை அடித்தளம் இருந்தாலும், அதில் மாத்திரம் திருப்தியடைய முடியாது. அங்கு, நமது உணவுப் பயிர்ச்செய்கை மற்றும் விநியோக வலையமைப்பு சீர்குலைந்துவிடாமல் இருப்பதற்கு அனைவரினது பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

கடந்த காலங்களில் தொற்றுநோய் பரவும் அபாயம் இருந்த போதிலும், லக்போஹோரா பணியாளர்களாகிய நாம் எமது தேசியப் பொறுப்பை முழுவீச்சுடன் நிறைவேற்றியுள்ளோம். நமது உடல்நிலையைப் பொருட்படுத்தாமல், நாங்கள் எங்கள் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டோம். அனைத்து சமூக நிறுவனங்களும் முடங்கினாலும் உணவு விநியோகம் தடைபடாமல் பார்த்துக் கொண்டோம். நம்மில் பெரும்பாலானோர் இவ்வைரஸ் நோய்வாக்குட்பட்டோம், ஆனால் நாங்கள் தொடர்ந்து சென்றோம். உறுதியுடனும், துணிச்சலுடனும், தன்னலமற்ற தன்மையுடனும், நமது தேசியப் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் நாங்கள் போராடினோம். நமது விவசாயிகளைப் பாதுகாத்து, நமது தேசத்தின் உணவு விநியோகத்தை உறுதி செய்தோம். அந்த பணிக்காக நாங்கள் அமைதியாக பெருமிதம் கொள்கிறோம்.

லக்பொஹொர முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை

விவசாயம், கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடை அபிவிருத்தி,
நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு

288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய, இலங்கை.

தொலைபேசி : +94 11 2 868 920 | தொலைநகல் : +94 11 2 863 497
மின்னஞ்சல் : info@agrimin.gov.lk | இணையம் : www.agrimin.gov.lk

Creative Writing, Photography,
Layout & Design

කලාව™ | Creative Solutions

79, Wijerama Road, Udahamulla, Nugegoda, Sri Lanka.
+94 11 302 4950 | +94 71 224 11 00
kalawainfo@gmail.com

வருடாந்த அறிக்கை

2019/20

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
லக்பொஹெர சுவர்ணஜயந்தி மாவத்தை,
ஹூனுப்பிட்டிய, வத்தளை, இலங்கை.

தொலைபேசி. : 011-2 930 298/ 99 | தொலைநகல் : 011-2 947 763
மின்னஞ்சல் : lakpohora@sltnet.lk | இணையம் : www.lakpohora.lk

AWARDS



ISO 14001: 2004
சுற்றுச்சூழல் தரச் சான்றிதழ்



வருடாந்த அறிக்கைகள் விருது 2014
தகுதிக்கான விருது



JASTECA CSR விருது 2014
தகுதிக்கான விருது



CNCI சாதனையாளர் விருது 2014
தேசிய மட்டத்திலான திறமைக்கான விருது



தேசிய கமத்தொழில் வியாபார விருது 2014
வெள்ளி விருது



தேசிய உற்பத்தித்திறன் விருது 2012/13
இரண்டாம் இடம்



இல்ங்கை தேசிய தர விருது 2013
வெள்ளி விருது



SLCBCC வியாபார நட்சத்திரம் 2014
வெள்ளி விருது



அக்கிமொட்டோ 5S விருது 2014
தகுதிக்கான விருது



தேசிய வியாபாரத்திற்கான
சிறந்த விருது 2014
தங்க விருது



மனிதவள முகாமைத்துவ விருது 2013
வெள்ளி விருது

உள்ளடக்கம்

இலங்கை விவசாயத்தின் அடித்தளம்	06
கூட்டாண்மைத் தகவல்	07
எமது பயணத்தின் மைல்கற்கல்	10
இலக்கு மற்றும் நோக்கு	14
நிதி ரீதியலான முக்கிய கட்டங்கள்	17
கடந்த 10 வருடகால நிதி பற்றிய முக்கிய கட்டங்கள்	18
தலைவரின் செய்தி	20
பொது முகாமையாளரின் அறிக்கை	24
பணிப்பாளர்கள் சபை	26
சிரேஷ்ட முகாமைத்துவக் குழு	32
கம்பனியின் நிறுவன ரீதியிலான கட்டமைப்பு	36
முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு	40
கூட்டாண்மை ஆட்சி	44
இடர் முகாமைத்துவ அறிக்கை	46
மனிதவள முகாமைத்துவம் அறிக்கை	49
கணக்காய்வு மற்றும் குழுவின் அறிக்கைகள்	58
நிதியியல் கூற்றுக்கள்	68
பணிப்பாளர் பொறுப்புகளுக்கான அறிக்கை	71
தலைவர் மற்றும் நிதியியல் முகாமையாளரின் பொறுப்பு அறிக்கை	72
கணக்காய்வாளர் நாயகத்தின் நிதயியல் அறிக்கை	73
இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று	80
நிதி நிலைமைக் கூற்று	81
உரிமையாண்மையில் கூற்று	82
காசு பாய்ச்சல் கூற்று	83
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்	84
பிரதிநிதிப் பத்திரம்	113



இலங்கை விவசாயத்தின் அடித்தளம்

(நிறுவனத் தகவல்கள்)

1957ஆம் ஆண்டு 49 ஆம் இலக்க அரச தொழிற்துறைகூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் ஜெர்மனி அரசின் நிதி மற்றும்தொழிநுட்ப உதவியுடன் 1964 இல் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி நிறுவப்பட்டது. இது கமத்தொழில்அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதோடு அதன் முழு உரிமை இலங்கை அரசுக்கே உரித்துடையதாகும்.

அதன் அடிப்படை பணியானது இலங்கை கமத்தொழில் துறையில் உரத்தேவைகளை பூர்த்திசெய்வதாகும். இப்பொறுப்பினை நாங்களே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இங்கு எமது உற்பத்தியின் தரமே முக்கிய பங்காற்றுகின்றது. நாம் நீண்டகாலமாக இரசாயன உரம் இறக்குமதி செய்தல், தரமானஉரத்தை தயாரித்தல் மற்றும் கலவை செய்த எமது உரத்தயாரிப்புகளைநாடு முழுவதும் எமது பிராந்திய உரக் களஞ்சியச்சாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விநியோக வலையமைப்பினூ டாகவிநியோகிக்கின்றோம்.

1987ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ்அப்போதைய அரச கொள்கையாக காணப்பட்ட,அரசாங்க கூட்டாண்மை மற்றும் அரசுக்கு உரித்தான வியாபார நிறுவனங்களை அரசாங்க கம்பனிகளாக மாற்றும் வேலைத்திட்டத்தின் கீழ், 1992 செப்டம்பர் 15 ஆம் திகதி எமது நிறுவனம் அதன் உண்மையான பெயருடன் இலங்கை லக்பொஹொர கம்பனி லிமிடெட் ஆக மீளக்கட்டமைக்கப்பட்டது. தற்பொழுது 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் துறையில் காணப்படும் அரச வியாபார ஒருங்கிணைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தமன்கடுவ விவசாய உரக் கம்பனி, 2008 இல் லக்பொஹொர கம்பனியோடு ஒன்றிணைக்கப்பட்டது. தற்பொழுது லக்பொஹொர கம்பனியின் பிரதான களஞ்சிய சாலையாக பொலன்னறுவை பிராந்திய உரக் களஞ்சியத் தொகுதி செயற்படுத்தப்படுகின்றது.

கூட்டாண்மை தகவல்

நிறுவன பெயர்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

நிறுவன பதிவு இலக்கம்

PB 499

சட்ட இயல்பு

இலங்கையின் திறைசேரி செயலாளரின் பூரண உரித்துடைய
வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

அலுவலக பதிவு மற்றும் முகவரி

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
லக்பொஹொர சுவர்ண ஜெயந்தி மாவத்தை,
உனுப்பிட்டிய, வத்தளை, இலங்கை.
தொலைபேசி : 011 2 930 298 / 99
தொலைநகல் : 011 2 947 763
மின்னஞ்சல் : info@lakpohora.lk
இணையதளம; : www.lakpohora.lk





நெற்பயிர்ச் செய்கைக்கு

எங்களால் விவசாயிகளால் வழங்கப்படும் நேரடியான
உரவகையில் யூரியா, மியூரியாட், பொட்டாஷ், மூன்று உயரிய
பொஸ்பேட், துத்தநாக சல்பேட்டு போன்றன அடங்கியுள்ளன.

நமது தேசத்தை ஊக்கமளிப்பதற்காக கடினமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம்

சமீப காலங்களில் கடுமையான நெருக்கடிமிக்க சூழ்நிலையில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டியுள்ளது. அந்த தசாப்தங்களில், நாங்கள் பல சவால்கள், தோல்விகள் மற்றும் அதற்கு அப்பால் பெரிய வெற்றிகளை எதிர்கொண்டுள்ளோம். இவையனைத்தும் இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக எமது மக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஊழியர்களின் திறமையினாலாகும்.

1964

கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் கைத்தொழில், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழ் ரூ. 58,000 முதலீட்டில் இலங்கை உரக் கூட்டத்தாபனம் ஆரம்பிக்கப்ப பட்டதுடன், அதன் முதல் தலைவராக அமைச்சின் மேலதிகச் செயலாளரான சேம் சில்வா அவர்களாவார். தலைமைக் காரியாலயம் டார்லி வீதியில் அமைக்கப்பட்டதுடன் 80,000 மெட்ரிக் டொன் களஞ்சியப்படுத்தக்கூடிய கொள்ளளவுடைய களஞ்சியச்சாலை ஒன்றை ஹுனுபிட்டியவில் ஆரம்பிக்கப்பட்டது.
வேனொன்று வாடகைக்கு எடுத்துக்கொள்ள பணம் இல்லாமையால் கூட்டுத்தாபனத்தின் முதல் ஊழியர்களில் ஒருவரான கே. கே. அன்டனி அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தில் வெளியேற்றப்படும் கடதாசிகளுக்காக 12 வளையும் கூடைகளைக் கொண்டு அவற்றை தனது சைக்கிளில் ஏந்திக்கொண்டு மீண்டும் தலைமைக் காரியாலயத்தை நோக்கி சைக்கிளில் சென்றுள்ளார்.

1966

மணிக்கு 35 மெகாவொட் கலவைக் கொள்ளளவைக் கொண்ட ஹுனுபிட்டிய வளாகத்தில் கலவை செயற்பாடுகள் ஆரம்பமானது. இங்கு 70,000 மொட்ரிக் டொன் கலக்கப்பட்டது. இறக்குமதி, உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக தனியார் நிறுவனங்களில் காணப்பட்ட ஏகபோகம் அதனூடாக சரிந்தது.

1970

கூட்டுத்தாபனத் தின் உரம் “லக்பொஹொர” வர்த்தகப் பெயரின் கீழ் விநியோகிக்கப் படுகின்றது.

1976

அனுமதி முறையை ரத்து செய்யப்பட்டு உர மானியத்தை அறிமுகம் செய்யப்பட்டது.

1977

திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தப் பட்டதோடு இலங்கை உரக் கம்பனியில் காணப்படும் துறை முன்னுரிமை நிலைமை இழக்கப்பட்டது. தனியார் துறையின் போட்டிகளுக்கு வலுவான ரீதியில் பதிலளித்ததுடன், கூட்டுத்தாபனமம் அதுவரை கூட்டுறவுகளுக்கு மற்றும் விவசாய சேவை மைய்யங்களுக்கு மட்டும் வரையறையுடன் காணப்பட்ட விநியோக வலைப்பின்னல் அங்கீகரிக்கப்பட்ட வநியோக பிரதிநிதிகள் வரை விரிவாக்கப்பட்டது.

1978

ஜெர்மனி அரசின் வெகுமதிகளாக 28 மில்லியன் ரூபாய் மற்றும் தொழிநுட்ப உதவியுடன் மாகோ, வெலிகம, பொலன்னருவை மற்றும் அனுராதபுர பிராந்திய களஞ்சியசாலைகளை கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

1980

புதிதாக உருவாக்கப்படும் களஞ்சியங்கள் 13,000 மெட்ரிக் டொன் முதல் 16,000 மெட்ரிக் டொன் வரையான கொள்ளளவுடைய முழுமையாக செயற்பட்டது. முதன் முறையாக, கூட்டுத்தாபனத்தினால் விநியோக பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

1986

உர விநியோகம் மேலோங்குவதற்காக அரசினால் உர ஒருங்கிணைப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவினால் விவசாய சமூகத்திற்காக உர பாவனை தொடர்பாக ஆரம்பக் கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் விவசாய சமூகத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

1988

ஜெர்மனி அரசிடம் 22 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டு ஹுனுபிட்டிய மத்தியக் களஞ்சியச்சாலையின் புணரமைப்பு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டது. மணிக்கு 30 மெட்ரிக் டொன் கொள்ளளவுடைய புதிய கலவை இயந்திரமொன்று பொறுத்தப்பட்டது.

1992

அரசினால் இச்சொத்துக்களை நீக்குவதற்கு தீர்மானிக்கப் பட்டதுடன் இது கூட்டுத்தாபன வரலாற்றில் ஒரு தீர்க்கமான வருடமாக அமைந்தது. ஹூனுபிட்டிய களஞ்சியச்சாலை இலங்கை உரக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதுடன், களஞ்சியங்களில் புவியியல் விரிவாக்கத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் மேலும் ஐந்து நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பின் அவற்றில் மூன்று தனியார் துறைக்கு விற்கப்பட்டதுடன் தமன்கடுவ உர நிறுவனம் மற்றும் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் வேறு இரண்டு நிறுவனங்களாக தொடர்ந்து செயற்பட்டது.

1994

உர மானியம் சிறப்பாக செயல்படுவதற்கு பிரதான பொறுப்பு இலங்கை உரக்கம்பனிக்கு நியமிக்கப்பட்டது. யுத்தம் நடைபெற்ற இக்காலத்தில் கடும் சவால்களுக்கு மத்தியில் கடைகள் மற்றும் தொலைதூர கிராமப் புறங்களுக்கு உரம் வழங்குவதில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

2002

செத்தம் வீதியில் இலங்கை உரக் கம்பனியின் தலைமைக் காரியாலயம் ஹூனுபிட்டிய வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

2005

அப்போதைய அரசாங்கத்தினால் வரலாற்றுமிக்க நெல் உர மானியமொன்று ஆரம்பிக்கப்பட்டது. விவசாயிகளின் 70% க்கு சலுகையை வழங்கி பைக்கு 350 ரூபா மாத்திரமான மானிய விலையுடன் 50 கி.கிராம் உரப் பையொன்று பெற்றுக்கொடுக்கும் பாரிய வேலைத்திட்ட மொன்றை மேற்கொண்டது.

2007

நிகரச் சொத்துக்களின் பெறுமதியானது 330 மில்லியன் நட்டமுடன் கூடிய தொகையை கொண்டிருப்பதோடு நிறுவன நிதியியல் ரீதியாக அதிக ஆபத்தான நிலையில் காணப்பட்டது.

2008

அரச பிரதிநி நிறுவனங்கள் தனியார் மயமாக்க மாட்டாது என அரசு வழங்கிய உறுதியின் காணரமாக இலங்கை உரக் கம்பனி புதிய முகாமைத்துவ சபை ஒன்றை நியமித்ததுடன், 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனம் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

2010

திறமையான முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் செயற்படும் நிறுவனம் ஆபத்தான நிலையிலிருந்து விலக ஆரம்பித்தது. அந்நிறுவனம் முழுமையாக மாற்றமடைவதன் தேவை நிறுவனத்தினால் 2013 ஆம் ஆண்டில் 1606 மில்லியன் ரூபாய் நிகரச் சொத்துப் பெறுமதி தனதாக்கிக் கொள்வதோடு இலாபமாக 99 மில்லியன் ரூபாய் திறைசேரிக்கு கிடைக்கப் பெற்றது.

2013

உயர் தரத்திலான 52 உரக் களஞ்சியச் சாலைகள் அமைக்கப்பட்டதுட ன், அந்நிறுவன GPS தொழிநுட்பத்துடன் போக்குவரத்து வலைப்பின்ன ஒன்று அமைக்கப்பட்டது.

2016

2016 ஆம் ஆண்டில், உயிரினங்களை மையமாகக் கொண்ட ஒரு தூய்மையான தேசத்தினை உருவாக்குவதற்கான தேசிய கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்ட து மற்றும் ஊகுஊ கரிம உர உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் இந்த கொள்கைப் பயணப்பாதையுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபை

தலைர்

திரு. ஜே.ஏ.சோமசந்தர ஜெயகொடி
(01.04.2019-03.12.2019)

திரு. சரத் சமரகோன்
(31.12.2019-31.08.2020)

பணிப்பாளர்கள்

திரு. எஸ்.ஜே.கே.டி.. ஜெரோம் ரெஜ்ஜி
(01.04.2019-02.12.2019)

திரு. பீ.டி.. மஹீலால் சந்திமா
(01.04.2019-03.12.2019)

திரு. எஸ்.எல். கமகே பந்துசிரி
(01.04.2019-31.03.2020)

திரு. கோசல ஜாகொடி
(15.01.2020-31.03.2020)

திருமதி. இ.ஜி.ஜி.எச். மதுக்க ரணசிங்க
(13.01.2020-31.03.2020)

திருமதி. எம்.டீ.ஐ. விசாகா அமரசேகர
(01.04.2019-03.12.2019)

திரு. எம்.பி. சரத் அபேய்ரத்னே
(01.04.2019-03.12.2019)

திரு. டப்லிவ்.பீ. திமுது பெத்தும்
(01.04.2019-31.03.2020)

திரு. எச்.கே.சீ. தாருக அல்விஸ்
(15.01.2020-31.03.2020)

திரு. எல். கெமுனு சமரவிக்ரம
(15.01.2020-31.03.2020)

நிறுவன செயலாளர்

திருமதி. ஏ.எம். ஷமிலா ஸ்வர்ணமாலி திலக்கரத்னே

முகாமைத்துவ குழு

திரு. ஆர்.ஏ.பி. பெரேரா	பொது முகாமையாளர் (பதில்) முகாமையாளர் (விநியோகம்)
திரு. பி.டி.எல். குமாரசிறி	தலைமை உள்ளக கணக்காளர்
பொ. டி.எம்.என்.ஏ. திஸ்ஸாநாயக்க	முகாமையாளர் (தொழில்நுட்பம்)
திருமதி. ஆர்.பி.எஸ். போதிபால	முகாமையாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்)
திருமதி. எம்.எல்.யூ. பெரேரா	முகாமையாளர் (ஆய்வுகூடம்)
திரு. ஜி.ஜி. சமன்	முகாமையாளர் (பதில்) (கொள்முதல் மற்றும் இறக்குமதி)
திருமதி. எம்.ஜீ.டீ. கயனி	முகாமையாளர் (பதில்) (நிதி)
திருமதி. டீ.எஸ்.எஸ். தர்மபந்து	முகாமையாளர் (பதில்) (நிர்வாகம் மற்றும் மனிதவளம்)



தேயிலை பயிர்ச் செய்கைக்கு

டீ.-65, டீ-200, டீ-750, யூ.டீ.-1625. யூ-397, யூடீ.-752,
வீ.பீ.எல்.சீ.-880, வீ.பீ.எல்.சீ.-945 வீ.பீ.யூ.எம்-910, யூ-625.
எஸ்டீ/ யூஎம்-400, எஸ்.டீ.யூ.வீ.ஏ-435. யூ-709





குறிக்கோள்

உயர்ந்த சர்வதச தரத்திற்கிணங்க உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன மற்றும் இயற்கை உரம் இலங்கையின் கைத்தொழில் சமூகத்திற்கு வழங்குதல்

இலக்கு

இலங்கை உரச் சந்தையில் தலைவராக விவசாயத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்புச் சேவைகள் மற்றும் பல்வகைப்பட்ட உள்ளீடுகளின் விநியோகம், நவீன உலகிற்கு பொறுத்தமான முன்னணி நிறுவனமாக திகழ்தல்.

நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக "லக்பொஹொர" குடும்பத்தின் உச்ச பங்களிப்புடன் இலங்கையின் விவசாய மற்றும் கமநல சேவைத்துறையில் உற்பத்தி, வருமானம் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றினை அதிகரிப்பதற்காக பல்வகை சந்தைக் கேள்விகளுக்கும் ஏற்ற விதத்தில் உர உற்பத்தி மற்றும் விற்பனையின் ஊடாக கம்பனி இலாபகரமாக நிலைத்து நிற்பதனை உறுதி செய்தல்

மதிப்புகள்


சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை பராமரித்தல் மற்றும் அடிமட்டத்தில் விவசாயிகளுடன் தொடர்பாக செயற்படுதல் எமது அடிப்படை மதிப்புகளாவதால், எம்மால் எமது எதிர்கால உற்பத்தி தொடர் அதனூடாகவே கட்டியெழுப்பப்பட்டது



காய்கறிகள் மற்றும் வணிகப் பயிர்ச் செய்கைக்கு

காய்கறிகள், பழங்கள், உருளைக்கிழக்கு, மிளகாய், காராமணி,
நிலக்கடலை, பச்சை பருப்பு, சோளம், கரும்பு மற்றும் பல பயிர்களுக்காக
விசேடமாக கலவை செய்யப்பட்ட உரவகைகள் உள்ளன

நிதி ரீதியிலான முக்கிய கட்டங்கள்



வருமானத்தின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள்			
விடயங்கள்	**2020**	**2019**	**Ratio**
	ரூபா	**ரூபா**	**%**
வருமானம்	2,100,583,296	1,869,949,695	12
வரிக்கு முன் இலாபம்	188,443,929	119,782,045	57
வரிக்கு பின் இலாபம்	97,993,276	(34,506,078)	384
ஒரு பங்கிற்கான சம்பாத்தியம்	1.95	(0.69)	383
சொத்துக்கள் மீதான இலாபம்	8.28	6.90	20
உரிமையாண்மை மீதான இலாபம்	0.34	0.34	0

நிதி நிலைமையின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள்			
விடயங்கள்	**2020**	**2019**	**Ratio (%)**
மொத்த சொத்துகள்	LKR 25,366,775,513	27,082,981,082	-6.34
மொத்த உரிமையாண்மை	LKR 6,141,242,690	LKR 5,531,184,013	11.03
வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை இல.	50,245,608	50,245,608	0
ஒரு பங்கிற்கான தேறிய சொத்து	LKR 110	LKR 116	11.03

கடந்த 10 வருடங்களின் நிதி பற்றிய முக்கிய கட்டங்கள்

	2011 இ.நி.அ.	2012 இ.நி.அ (7 மாதங்களுக்கு)	2013 இ.நி.அ. (7 மாதங்களுக்கு)	2014 இ.நி.அ.	2015 இ.நி.அ.	2016 இ.நி.அ.	2017 இ.நி.அ.	2018 இ.நி.அ.	2019 இ.நி.அ.	2020 இ.நி.அ.
விரிவான வருமானக்கூற்று										
வருமானம்	2,246,402,738	2,496,268,383	2,450,132,816	2,563,549,727	3,835,989,834	4,242,769,733	2,350,637,985	3,373,989,990	1,869,949,695	2,100,583,296
மொத்த இலாபம்	414,124,001	310,189,751	621,684,097	575,467,461	855,558,167	1,097,447,923	231,025,777	31,497,063	189,371,158	267,726,824
ஏனைய வருமானங்கள்	157,164,017	197,912,757	108,809,998	93,172,755	142,197,667	122,926,594	29,096,825	45,440,368	107,856,870	209,623,485
வரிக்கு முன் இலாபம்	73,979,009	159,544,495	199,894,319	241,328,764	520,200,738	836,604,005	127,804,541	39,346,123	119,782,045	188,443,929
வரி	(43,666,668)	(52,315,944)	(73,037,738)	(62,869,313)	134,184,888	(233,331,176)	11,787,491	(63,882,188)	(154,288,123)	(90,450,653)
வரிக்கு பின் இலாபம்	30,312,341	107,228,551	126,856,581	178,459,452	386,015,851	603,272,829	139,592,032	(24,536,064)	(34,506,078)	97,993,276
நிதி நிலைமை பற்றிய கூற்று										
குறிப்பிடப்பட்ட மூலதனம்	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080	502,456,080
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	1,986,087,280	1,836,179,780	1,835,723,580	1,835,723,580	1,833,071,080	1,833,071,080	2,506,976,187	2,028,858,589	2,291,788,758	2,297,282,725
வருமான ஒதுக்கங்கள்	224,109,054	1,285,578,730	1,397,891,510	1,500,363,432	1,869,914,195	2,392,840,203	2,494,732,936	2,792,590,448	2,736,939,175	3,341,503,885
மொத்த உரிமையாண்மை	2,712,652,414	3,624,214,590	3,736,071,170	3,838,543,092	4,205,441,355	4,728,367,363	5,504,165,203	5,323,905,117	5,531,184,013	6,141,242,690
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	1,895,412,152	1,908,557,760	1,882,887,059	1,879,174,306	1,865,055,225	1,838,655,988	2,683,237,393	2,636,328,307	2,744,935,187	2,705,686,663
மூலதன தெரிப்பாட்டு வளர்ச்சி	542,901	-	-	-	29,982,587	32,152,294	21,960,737	22,316,114	676,729	676,729
தாமதப்படுத்தப்பட்ட வரிச் செலவுகள்	-	4,862,949	73,037,738	5,561,375	37,484,888	-	-	(29,754,455)	154,288,123	5,493,967
திறைசேரி உண்டியலகளில் முதலீடு	434,767,955	471,025,753	338,620,163	471,894,936	489,125,747	514,903,604	532,548,539	583,043,365	634,370,554	698,334,484
தொட்டு உணர முடியாத சொத்துக்கள்	-	-	669,017	344,717	115,417	79,667	-	-	17,501,026	13,754,126
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	76,814,523	71,951,574	-	-	-	-	-	-	-	-
தேறிய நடைமுறைச் சொத்து	6,975,143,544	1,706,541,296	1,915,693,141	2,025,842,182	2,417,551,302	2,963,028,124	3,020,938,645	16,516,623,681	9,121,613,694	3,658,556,182
தாமதப்படுத்தப்பட்ட வரி பொறுப்புகள்	-	-	1,086,164	6,647,539	44,132,427	40,928,542	155,078,112	602,124,755	643,022,709	169,037,795
குறுகிய/ நீண்டகால கடன்கள்	5,369,929,928	-	-	17,728,367,618	31,304,325,268	-	-	20,746,712,026	14,795,213,338	14,103,482,956
காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்										
தொழி.நட.இரு. தேறிய காசு உட் / வெளிப்பாய்ச்சல்	(16,012,155,140)	12,695,227,509	(9,517,159,808)	(5,094,105,859)	(9,560,794,959)	(738,936,570)	11,542,320	8,052,725,854	4,431,360,823.00	(282,165,789)
முதலீ. நட.இரு. தேறிய காசு உட் / வெளிப்பாய்ச்சல்	(36,565,665)	(8,458,411)	83,232,936	(508,688,188)	(1,021,212,231)	(1,086,700,012)	(591,862,107)	(908,705,035)	1,301,050,014.00	1,435,897,612
நிதி சம. நட.இரு. தேறிய காசு உட் / வெளிப்பாய்ச்சல்	16,168,483,382	(13,079,312,780)	9,575,483,282	5,654,013,585	10,614,850,014	(3,843,885,272)	834,304,831	(7,628,967,604)	(5,966,502,687.00)	(691,730,383)
ஏனைய தகவல்கள்										
ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் ரூபா	0.60	2.13	2.52	3.55	7.68	12.01	2.78	(0.49)	(0.69)	1.95
ஒரு பங்கிற்கான பங்கிலாபம் ரூபா	0.18	0.18	0.76	1.05	2.30	3.60	0.83	(0.15)	(0.21)	0.59
ஒரு பங்கிற்கான தேறிய சொத்து ரூபா	54	72	74	76	84	94	110	116	110.00	122.22
நடை மறை விகிதம் (நேரங்களின் எண்ணிக்கை)	1.29	1.08	1.08	1.06	1.06	1.09	1.10	2.60	1.60	1.19



தென்னை பயிர்ச் செய்கைக்கு

வய்.பீ.எம். (டப்ளியூ)/ (டி), ஏ.பீ.எம். (டப்ளியூ)/ (டி), சீவல். (டப்ளியூ)/ (டி)

தலைவரின் செய்தி



> "அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'சௌபாக்கிய தெக்ம' சுபீட்சத்தின் பார்வை கொள்கை அறிக்கையினால் இலங்கை உரக் கம்பனிக்கு வெற்றியடைய பல தனித்துவமான சவால்களையும் பயனுள்ள வாய்ப்புகளையும் முன்வைத்துள்ளது."

பணிப்பாளர் சபையின் சார்பாக, 2020 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான இலங்கை உரக் கம்பனியின் வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1964 ஆம் ஆண்டு முதல், நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உரங்களை இறக்குமதி, கலவை மற்றும் மொத்த விற்பனையானது அரசத்துறையில் லக்பொஹொர நிறுவனம் முன்னணியில் உள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் 57 வருட வரலாற்றில், தேசத்தின் விவசாய சமூகத்திற்கு இன்றியமையாத உற்பத்தி, வர்த்தக மாதிரியால் இயக்கப்படும் லக்பொஹொர நிறுவனம், தொடர்ந்து வளர்ச்சியடைந்து, இலாபகரமான நிறுவனமாக நிலைத்திருக்க உறுதி பூண்டுள்ளது.

வெளிப்புற சூழலில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் ஒருவரின் திறமையை நிரூபிக்க ஒரு சவாலை அல்லது வாய்ப்பை வழங்குகிறது. அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'சௌபாக்கிய தெக்ம' சுபீட்சத்தின் பார்வை கொள்கை அறிக்கையினால் இலங்கை உரக் கம்பனிக்கு வெற்றியடைய பல தனித்துவமான சவால்களையும் பயனுள்ள வாய்ப்புகளையும் முன்வைத்துள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி இந்த மாற்றங்களை தொலை நோக்குடன் எதிர்பார்த்தது. இந்த சவால்களை எதிர்கொள்ள ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். நிறுவன உற்பத்தித்திறன், சேவைத் தரம், உரத்தின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவது மற்றும் நிறுவனத்தின் தொலை நோக்கு,



இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதே இதன் நோக்கமாகும். மேலும், திட்டமிட்ட வளர்ச்சிகள் மற்றும் தலையீடுகள் மூலம் அதன் வெளிப்படுத்தப்பட்ட இலக்குகளை அடையும். நிறுவனத்தின் மூலோபாயம், கட்டமைப்பு, அமைப்புகள், உத்திகள் மற்றும் தனிநபர்களின் மூலோபாய நிர்வாகத்தினால் உதவப்படும். இது நிறுவனத்தின் எதிர்காலத்திற்கு வழி வகுக்கும், மூலோபாய வழிகாட்டிகளின் குறிக்கோள் முதிர்ச்சியடைவதற்கும் காலப்போக்கில் மாறுவதற்கும் இடமளிக்கப்படும்.

லக்பொஹொர நிறுவனம் 376 விவசாய சேவை மத்திய நிலையங்களினூடாக நெல் விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய களஞ்சியசாலைகளை அம்பாந்தோட்டை, கந்தளாய் மற்றும் ஹுனுப்பிட்டிய ஆகிய இடங்களில் நிறுவுதல் மற்றும் நாடளாவிய ரீதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களை நியமித்து அதன் சேமிப்பு திறனை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. நிறுவனம் நாடளாவிய ரீதியில் 45 பிராந்திய உர விற்பனை நிலையங்களைக் கொண்ட விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளதுடன், அதன் உற்பத்திப் பொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் உதவுகிறது. மேலும், புதிய வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக புதுமையான தயாரிப்புகள் தொடர்புடைய சந்தையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன மற்றும் ஏற்கனவே உள்ள வாடிக்கையாளர்களுடன் உறவுகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

சந்தைப் போக்குகள் மற்றும் யதார்த்தத்துடன் உலகளாவிய மற்றும் தேசிய போக்குகளைப் புரிந்துகொள்வதில் நிறுவனம் ஆர்வமாக உள்ளதுடன், தேசிய மற்றும் சர்வதேச கரிம உர விநியோகஸ்தர்களுடன் இணைந்து கரிம விவசாய உர பாவனையை வர்த்தக ரீதியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உர வியாபாரத்தின் எதிர்காலம் இத்தகைய முன்னுதாரண மாற்றங்களில் தங்கியுள்ளது என்பதை நிறுவனம் நன்கு அறிந்திருக்கிறது. எனவே, கரிம உரங்களின் விற்பனையில் சந்தைத் தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, உழவர் கல்விக்கு முன்னுரிமை அளித்து, தயாரிப்பு செயல்முறை முதல் விவசாயிக்கு விநியோகிக்கும் பரந்த அளவிலான செயல்முறையை நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோயினால் செயல்முறைகள் மற்றும் வியாபார நடவடிக்கைத் தன்மை பல விதத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றம் கோவிட்-19க்கு பிந்தைய காலத்தில் வெளிப்படும் புதிய யதார்த்தங்களுக்கு ஏற்ப நிறுவனங்களை மறுசீரமைக்க கட்டாயப்படுத்துகிறது. இந்த நெருக்கடியின் மிக முக்கியமான சவாலானது தற்போதைய பணியாளர்களை தக்கவைத்து ஊக்குவிப்பதாகும். இந்த நோக்கத்திற்காக, எங்கள் ஊழியர்களுக்கு போக்குவரத்து அல்லது வீட்டிலிருந்து வேலை செய்யும் திறன் போன்ற மறுசீரமைப்பு மூலம் ஊழியர்களுக்கு கூடுதல் ஆதரவைத் ஆரம்பிப்பதற்கு நாங்கள் முன்மொழியப்பட்டுள்ளோம்.

ஊழியர்களின் முழு ஊதியம், பதவி உயர்வு, போனஸ் மற்றும் ஊக்கத்தொகையை அதிகரித்து அவர்களை ஊக்குவிக்கிறோம். மேலும், ஊழியர்களின் ஆரோக்கியம்

மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அதிநவீன சுகாதார வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எங்கள் ஊழியர்களுக்கு எதிர்காலத்தை எதிர்கொள்ளும் வகையில் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினோம். மேலும், 200 கோடி ரூபா பெறுமதியான பாரிய செயற்திட்டமாக இருந்தும் இத்திட்டத்தை நனவாக்க உதவிய கௌரவ அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனிதனை மையமாகக் கொண்ட உற்பத்தித் திறனில் தொடர்ச்சியான வளர்ச்சியுடன் மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் திற அபிவிருத்தியில் லக்பொஹொர நிறுவனம் கவனம் செலுத்தியது. உரையறுக்கப்பட்ட உரக் கம்பனியின் மனித வள திட்டமிடல் நீண்ட கால மற்றும் குறுகிய கால மூலோபாய இலக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, தொழிற்படையின் திறமைகள் மற்றும் கொள்ளளவின் அவசியத்தை மேம்படுத்த தேவையான குறிப்பிடத்தக்க மாற்றங்களை நிவர்த்தி செய்ய செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால நிறுவன நிலைத்தன்மைக்காகவே, அடிப்படை திறன்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் நீண்ட கால மூலோபாய இலக்குகளுக்காக வகைப்படுத்தப்பட்டு, அதற்கேற்ப ஒரு மூலோபாய வரைபடம் வரையப்பட்டது. 2020 ஆம் ஆண்டு இலங்கையில் விவசாய சமூகத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் கொண்ட ஒரு சவாலான ஆண்டாக இருக்கும் என நம்புகிறோம். எமது இலக்குகளை அடையவும் மற்றும் மேம்படுத்தவும் புதிய வாய்ப்புகளைப் உள்வாங்கிக்கொள்ள எமது அனுபவம் வாய்ந்த மற்றும் ஆற்றல்மிக்க குழுவினால் இயலும் என நாம் நம்புகிறோம்.

எமது வெற்றிக்கு இடையறாது ஆதரவளித்த அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே, விவசாய அமைச்சர், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இயக்குநர்கள் குழு உறுப்பினர்கள், எங்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் லக்பொஹொர குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜனத் விதானகே
தலைவர்



இறப்பர் பயிர்ச் செய்கைக்கு

ஆர்.ஏ.-465, ஆர்.யூ.-462, ஆர்.யூ.-465, ஆர்.வய்.பி,
ஆர்.எஸ்.ஏ. போன்ற விசேட கலவை உரம்



பொது முகாமையாளரின் அறிக்கை

2019/2020 நிதியாண்டிற்கான நாட்டின் முன்னணி உர விநியோகஸ்தரான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை முன்வைக்கவும் மற்றும் எமது மதிப்புமிக்க பங்குதாரர்களை நினைவு கூறிக்கொள்வதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

> "இலங்கை விவசாயத்தின் பண்டைய வரலாற்றில் இயற்கை கரிம வளங்கள் முக்கிய பங்கினை வகித்துள்ளன."

மேன்மைதங்கிய கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் "செளபாக்கிய தெக்ம" சூழ்ச்சத்தின் பார்வைக்கிணங்க சலுகை விலையில் உரம் வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தில் முன்னோடியான அரச நிறுவனமாக இலங்கை உரக் கூட்டுத்தாபனம் திகழ்கிறது. இந்தக் கொள்கையின் கட்டமைப்பிற்குள், தற்போது நாம் எமது சொந்த மூலோபாயத்தை நிறுவுவதற்கான ஒரு தீர்க்கமான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளோம். மதிப்பாய்விற்குட்பட்ட ஆண்டில், நிறுவனத்தின் நீண்டகால உத்திகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக வழங்கப்பட்ட வளர்ச்சி வாய்ப்புகளை மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதோடு, தனியார் துறை உர நிறுவனங்களுடன் போட்டியிட்டு சந்தையில் எமது நிறுவனத்தினால் சந்தையில் ஒரு முக்கிய பிரிவை கைப்பற்றியுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

பரவி வரும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக உலகின் ஏனைய நாடுகள் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்ட போதிலும், இலங்கையில் விவசாயத் துறையின் விரைவான வளர்ச்சியானது அண்மையகாலத்தில் சராசரி பொருளாதார

முன்னேற்றத்திற்காக பிரதான கடமைப்பொன்றை நிறைவேற்றியுள்ளது.

மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டு விவசாயத் துறையின் செயல்திறனுக்கான உயர் உத்வேகத்தைக் காணக்கூடியதோடு அதற்குத் தேவையான பலம் உரம் என்பதோடு, இலவசமாக உரத்தை வழங்குவதற்கான அரசாங்கத்தின் கொள்கை முடிவு விவசாயத்தின் வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க படியாக அமைந்தது. இச்சந்தர்ப்பத்தில், முழு விவசாய சமூகத்தின் முன்னேற்றத்திற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு இலங்கை உரக் கம்பனியால் பங்களிக்க முடிந்தது.

இந்த கொள்கை மாற்றங்களுக்குப் பிறகு, நாட்டின் விவசாய சமூகத்திற்கு உரங்களை இறக்குமதி செய்பவராக, உற்பத்தி செய்பவராக, விற்பவராக மற்றும் விநியோகிப்பவராக, தேசத்தின் விவசாய சமூகத்திற்காக லக்பொஹொர நிறுவனம் பிரதிநிதித்துவப்படுத்தியது. நிறுவனத்தை வழிநடத்திய தலைவர்கள், வலுவான நிர்வாகக் குழு மற்றும் நம்பிக்கையான பணியாளர்களின் வழிகாட்டுதல் தேசிய வளர்ச்சியில் ஒரு மாபெரும் சக்தியாக முன்னோக்கிச் செல்ல எமக்கு பலமாக அமைந்தது. பாரிய குழு முயற்சி காரணமாக மதிப்பாய்வு ஆண்டு இலாபகரமாக இருந்தது. 2020 ஆம் ஆண்டில், மூலோபாய திட்டமிடல் மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை செயல்படுத்துவதன் மூலம் பல முக்கிய மைல்கற்கள் அடையப்பட்டன. 2020 ஆம் ஆண்டிற்கான உரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் நிகர சொத்துக்கள் 25.36 பில்லியன் ரூபாவாகும். நீண்ட கால உத்தியைப் பயன்படுத்தி, நிறுவனம் அதன் வரிக்கு முந்தைய லாபத்தை ஆண்டுக்காண்டு ரூ.119.78 மில்லியனில் இருந்து ரூ.181.90 மில்லியனாக அதிகரித்தது. இது சமீபத்திய ஆண்டுகளில் மிக உயர்ந்த வளர்ச்சியாகும். மூலோபாய கொள்கைகளை விரைவுபடுத்தும் உத்திகளை செயல்படுத்துவதன் மூலம், நாட்டில் உள்ள சில தீவிரமான சமூக மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு தீர்வுகளை உருவாக்குவதுடன் சமூகத்திற்கு பரந்த நன்மைகளை வழங்கவும் முடிந்துள்ளது.

இலங்கை முழுவதிலும் உள்ள கரிம கருத்திற்கு நிலையான முடிவுகளைக் கொண்டு வருவதற்கு பழைய நடைமுறைகளை மறுவடிவமைப்பதன் மூலம் உள்ளூர் விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் பல மூலோபாய திட்டங்களை நிறுவனம் செயல்படுத்த முடிந்தது.

சுற்றுச்சூழலை தங்கள் அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கருதும் உள்ளூர் விவசாயிகளுக்கு கரிம உரங்களைப் பயன்படுத்துவது பற்றிய கருத்து எப்போதும் தெரிந்திருக்கவில்லை. இலங்கை விவசாயத்தின் பண்டைய வரலாற்றில் இயற்கை கரிம வளங்கள் முக்கிய பங்கு வகித்தன. கடந்த காலங்களிலிருந்து நாம் நிச்சயமாக பாடங்களைக் கற்று, விவசாய நோக்கங்களுக்காக கரிம உரங்களைப் பயன்படுத்துவதற்கான விரிவான மற்றும் அபிவிருத்தி முறைகளுடன் முன்னோக்கி செல்ல முடியும் என்ற உணர்வுடன், நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் பயிர்ச்செய்கையாளர்களிடையே கரிம உரத்தை ஊக்குவிப்பதற்காக புதிய செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

லக்போஹொர குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் அதன் எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் இருப்பதால், திறமையை வளர்ப்பதற்கான செலவுகள் மற்றும் நிறுவனத்தின் எதிர்கால சீர்திருத்தச் செலவுகளைக் குறைப்பதில் கவனம் செலுத்த மாட்டோம். சமீபத்திய ஆண்டுகளில், நிறுவனம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் எமது அனுபவம் வாய்ந்த ஊழியர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிப்பதற்கும் அதிக அளவில் முதலீடு செய்துள்ளது. எங்கள் நம்பிக்கையான ஊழியர்களின் நீண்ட கால நலனுக்காக இந்த அர்ப்பணிப்புகளைத் தொடர நாங்கள் எதிர்நோக்குகிறோம். வியாபாரத்தில் லக்போஹொர குடும்பம் எப்போதும் எமது இதயத்தில் உள்ளது. எங்களின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால வெற்றிகள் முழுவதுமாக அவர்களையே சார்ந்துள்ளதுடன், லக்போஹொர குடும்ப உறுப்பினர்களின் அர்ப்பணிப்புக்காக இதயப்பூர்வமாக நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.



ஆர்.ஏ.பீ. பெரேரா
பொது முகாமையாளர்

பணிப்பாளர்கள் சபை



திரு. ஜனத் விதானகே
தலைவர்

ஜனத் விதானாவின் ஷரீரி இலங்கையின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான ரோயல் கல்லூரியின் தயாரிப்பாகும். ஒழுக்கம் மற்றும் நோக்கத்திற்கான அர்ப்பணிப்பு மூலம் அவர் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயிற்சியையும் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் திறன் உள்ளது. இவர் தனது சகாப்தத்தின் சிறந்த பள்ளி குத்துச்சண்டை வீரர்களில் ஒருவராகவும் திகழ்ந்தவர். மேலும், இவர் பள்ளி படகோட்டுதல் அணியில் ரோயிங் ரைடராக இரட்டை வண்ணங்களைப் பெற்றுள்ளார். இவரின் தலைமைத்துவ திறமையை இனங்கண்டு கல்லூரி மாணவத் தலைவராக நியமிக்கும் பாக்கியம் கிடைத்தது. பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், ஹட்டன் நேஷனல் வங்கியில் சேருவதற்கு முன், ரஷ்யாவில் மருத்துவப் பட்டப்படிப்புக்கான புலமைப் பரிசை பெற்றுள்ளார். இவர் Cathay Pacific இல் முகாமையாளரான இவர், பல ஆண்டுகள் அந்தப் பதவியை வகித்ததோடு, அக்காலத்தில் சுற்றுலாத் துறையில் மிகவும் நம்பகத்தன்மையான நபர்களில் ஒருவராக திகழ்ந்தார். இவரது பதவிக் காலம் முழுவதும் இவர் சுற்றுலாத்துறையின் ஆர்வத்தை எச்சந்தர்ப்பத்திலும் இழக்காமல், தனது சொந்த சுற்றுலாத்துறை நிறுவனத்தின் உரிமையாளராகவும் ஆனார்.

இலங்கையில் அதிகமாக சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்ட நபர்களில் தனது தொழில் வாழ்க்கையின் போது 137 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளதோடு, இவரது பயணங்களின் போது பெற்ற பாரிய அனுபவத்தை அவருடன் தொடர்புடைய ஒவ்வொரு வணிகத்திலும் பயன்படுத்துகிறார். இவர் லக்பொஹொர தலைவராக தேசத்திற்கான தனது சேவையைத் தொடர்ந்து செல்வதற்கு முன், இலங்கை மின்சார சபையின் (LECO) பணிப்பாளர் சபை அங்த்தவராக பணிபுரிந்தார்.

இது தவிர விவசாயம் மற்றும் தாவரவியலில் தனது வாழ்நாள் முழுவதும் ஆர்வம் கொண்டிருந்தார். வாழ்க்கைக்கான அணுகுமுறையில் எப்பொழுதும் பணிவானவர், உலகம் தனது நோக்கம் மற்றும் வழிமுறைகள் ஏற்றுக்கொண்டாலும், இலங்கைக்கு நன்மையென தோன்றும் செயலைச் செய்ய ஒருபோதும் இவர் தயங்குவதில்லை.

சோமசந்திர ஜயகொடி – தலைவர்
(01.04.2019-03.12.2019)

சரத் சமரகோன் – தலைவர்
(31.12.2019-31.08.2020)



திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிரி
பணிப்பாளர்

திரு. எஸ்.எல்.ஜி. பந்துசிரி அவர்கள் அரச நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டமும், நிதி முகாமைத்துவத்தில் முதுகலைப் டிப்ளோமாவும் மற்றும் அரச நிதி முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இவர் விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு நியமிக்கப்பட்டார். இவர் அரச அடகு மற்றும் முதலீட்டு வங்கி உட்பட பல முன்னணி அரச சபை நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இவர் தற்போது விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் பிரதான கணக்காளராக கடமையாற்றியுள்ளதோடு கணக்கியல் துறையில் 34 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் பெற்றுள்ளார். இவர் தற்போது கொழும்பு கொமர்ஷல் லிமிடெட் மற்றும் லக் பொஹொர நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். மேலும் இவர் நிறுவனத்தின் தணிக்கை மற்றும் நிர்வாகக் குழுவின் உறுப்பினருமாவார்.

பணிப்பாளர்கள் சபை



திரு. டப்லிவ்.பீ. திமுத்து பெத்தும்
பணிப்பாளர்

திரு. திமுத்து பெத்தும் அவர்கள் 15.01.2020 முத்தல் 31.03.2020 வரை இலங்கை உரக் கம்பனியின் பணிப்பாளர் வகையில் பணிபுரிந்துள்ளார்.



திரு. கோசல ஜயகொடி
பணிப்பாளர்

திரு.கோசல ஜெயக்கொடி அவர்கள் தொழில் ரீதியாக சட்டத்தரணியாவார். இவர் குற்றவியல் சட்டம், பிராண்ட் பாதுகாப்பு மற்றும் கள்ளநோட்டு, நுகர்வோர் சட்டம், வணிக சட்டம், தொழிலாளர் சட்டம் மற்றும் எதிர்கால போக்குவரத்து ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டவியல் பட்டமும் பெற்றுள்ளார். இவர் 2011 இல் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணிக்கு அழைக்கப்பட்டதுடன் 10 வருட கால சட்டம் தொடர்பாக அனுபவமுள்ளவர். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் நிறுவனம் ஆகியவற்றால் பாராட்டப்பட்டுள்ளார். திரு.கோசல ஜெயக்கொடி அவர்கள் சட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல், மூலதனச் சந்தை நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகளில் பல வருட அனுபவம் கொண்டவர்.



திரு. எச்.கே.சீ. தாருக்க அல்விஸ்
பணிப்பாளர்

திரு. அல்விஸ் அவர்கள் கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார். இவர் அரசியல் மற்றும் பொது நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா பெற்றுள்ளார். தற்போது இங்கிலாந்தில் உள்ள பக்கிங்ஹம்ஷயர் புதிய பல்கலைக்கழகத்தில் சட்டவியல் பட்டத்தின் இறுதியாண்டில் கல்வி கற்று வருகிறார்.

கலாநிதி நாலக கொடஹேவா தற்போது நகர அபிவிருத்தி, கழிவு அகற்றல் மற்றும் சுகாதார துப்புரவு இராஜாங்க அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளராக உள்ளார். பொது நிர்வாகம் மற்றும் அரசியலில் பத்தாண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றுள்ளார்.



செல்வி. ஈ.ஜீ.ஜீ.எச். மதுகா ரணசிங்க
பணிப்பாளர்

செல்வி மதுகா ரணசிங்க ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதியியல் துறையில் இளங்கலை பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதி பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக பொதுத் திறைசேரியில் பணியாற்றியுள்ளதுடன் மற்றும் தேசிய நிதி திட்டமிடலில் விரிவான அனுபவம் பெற்றவர். அவர் தற்போது பொது நிறுவனங்கள் துறையின் துணை இயக்குநராகவும், லக் உரம் மற்றும் மாநில அச்சகக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர்கள் குழுவின் கருவூலப் பிரதிநிதியாகவும் உள்ளார்.

பணிப்பாளர்கள் சபை



திரு. எல். கெமுனு சமரவிக்கிரம
பணிப்பாளர்

திரு. கெமுனு சமரவிக்ரம அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டமும், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனத்தில் பணியாளர் முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இவர் 1993 முதல் பணியாளர் முகாமைத்துவ நிறுவனத்தில் உறுப்பினருமாவார். இவர் தாய்லாந்தில் மனித வளப் பயிற்சி, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கபிரே ஆகிய நாடுகளில் மூலோபாய முகாமைத்துவம் மற்றும் ஹைதராபாத்தில் லியோனல் பொது முகாமைத்துவம் தொடர்பாக சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். 1987 முதல் 1993 வரை தென்னை உற்பத்திச் சபையின் உதவி முகாமையாளராக தனது பணியைத் தொடங்கிய இவர், 1993 ஆம் ஆண்டு அசர அடகு மற்றும் முதலீட்டு வங்கியில் தனிநபர் முகாமையாளராக சேர்ந்துள்ளார். பின்னர் 2003 ஆம் ஆண்டு மனித வளம் மற்றும் விநியோகப் பிரிவில் உதவிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டு இறுதிகாயக 2011 முதல் 2012 வரை பிரதிப் பொது முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1999 இல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர் முகாமையாளராகவும், 1993 முதல் 1999 வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளராகவும் இருந்தார்.



திருமதி. ஏ.எம்.சீ.எஸ். திலகரத்ன
கம்பனிச் செயலாளர்

திருமதி. திலகரத்ன இலங்கை கம்பனியின் செயலாளராவார். இவர் 2009 ஆம் ஆண்டிலருந்து நிறுவனத்தின் உதவி முகாமையாளராக (சட்டம்) பணியாற்றியுள்ளார். இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின்னர், 2014 ஆம் ஆண்டு வழக்கறிஞராக பதிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு வழக்கறிஞராவதோடு பொது சான்று வழங்கும் (நோட்டரி) அலுவலராக தொழிலாற்றுகின்றார். இவர் முழு நிறுவனத்தினுடைய கம்பனி செயலாளர் வேலைகளையும் மற்றும் சட்டரீதியிலான கட்டமைப்பு வேலைகளையும் மேற்கொள்கின்றார். இவர் இலங்கை உரக்கம்பனி லிமிடெட் குழுவோடு இணைவதற்கு முன்பு நுகர்வோர் விவகார அதிகார சபையில் சேவையாற்றியுள்ளதோடு இவர் களனிப் பல்கலைக்கழகத்தினுடைய கலைமாணிப் பட்டதாரியுமாவார்.



சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



திரு. ஆர்.எ.பி. பெரேரா
பொது முகாமையாளர் (பதில்) மற்றும் முகாமையாளர் (விநியோகம்)

இவர் கொழும்பு பல்கலைக்கழத்தில் சமூகவியலில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேலதிக டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் உற்பத்தித்திறனில் டிப்ளோமா பட்டத்தை பெற்ற இவர், தீ மற்றும் பாதுகாப்பு, தொழிற்துறை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் நிரம்பல் சங்கிலி முகாமைத்துவம் போன்றனவற்றில் உயர்கற்கை நெறிகளை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்துள்ளார். தற்பொழுது இவர் மனிதவள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் பயின்று வருகின்றார்.



திரு. பி.டி.எல். குமாரசிறி
சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளர்

இவர் களனி பல்கலைக்கழத்தில் வணிக பிரிவில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் இலங்கை அரச நிதி கணக்காளர்கள் சங்கம், இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உறுப்பினராகவுள்ளதுடன் அரச கணக்கு மற்றும் நிதி கல்வியகம் மற்றும் உள்ளக கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உள்ளக கணக்காய்வுக்கான சான்றிதழையும் பெற்றுள்ளார். கணக்காளர் மற்றும் சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளராக தேசிய உபகரண இயந்திர ஸ்தாபனத்தில் கடமையாற்றியுள்ளார்.



பொறியியலாளர் டி.எம்.என்.ஏ. திஸ்ஸாநாயக்க
முகாமையாளர் (தொழில்நுட்பம்)

இவர் பேராதனை பல்கலைக்கழத்தில் பொறியியல் துறையில் Bsc பட்டத்தையும் களனி பல்கலைக்கழத்தில் வர்த்தக நிர்வாகத்தில் (நிதி) முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கை பொறியில் கல்வியகத்தில் உறுப்பினராகவுள்ளதுடன் இக்கல்வியகத்தில் பொறியியல் பிரதேச குழுவிலும் அங்கத்தவராகவும் உள்ளார்.



திருமதி. ஆர்.பி.எஸ். போதிபால
முகாமையாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்)

இவர் விஞ்ஞான பட்டதாரியாகவுள்ளதுடன் சப்ரகமுவ பல்கலைக்கழத்தில் விவசாயத்துறையில் (பெருந்தோட்ட முகாமைத்துவம்) விசேட பட்டத்தை பெற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழத்தில் விவசாய விஞ்ஞான பட்ட பின் பட்டதாரி கல்வியகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். பெருந்தோட்டத்துறை முகாமைத்துவத்திலும் இவர் அனுபவம் வாய்ந்தவராகவுள்ளார்.



திருமதி. எம்.எல.யூ. பெரேரா
முகாமையாளர் (ஆய்வுகூடம்)

இவர் களனி பல்கலைக்கழத்தில் விஞ்ஞானவியல் (உயிரியல் விஞ்ஞானம்) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழத்தில் பகுப்பாய்வு இரசாயனவியலில் பட்ட பின் பட்டத்தையும் (Msc) பெற்றுள்ளார். 1996 இல் இலங்கை உரக்கம்பனியில் இணைந்த இவர் உர பகுப்பாய்வு சம்பந்தமான உயர் அனுபவம் உள்ளவரும் நீண்ட காலம் சேவை புரிபவருமாவார்.



திரு. ஜி.ஜி. சமன்
பதில் முகாமையாளர் (கொள்முதல் மற்றும் இறக்குமதி)

இவர் கொழும்பு பல்கலைக்கழத்தில் கலைத்துறையில் பட்டத்தை பெற்றுள்ளதுடன் தற்போது இவர் இலங்கை நிர்வாக அபிவிருத்தி கல்வியகக் கொள்ளுதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்தில் டிப்ளோமா பாடநெறியினை கற்கின்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



திருமதி. எம்.ஜீ.டீ. கயனி
பதில் முகாமையாளர்
(நிதி)


இவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை விசேட பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், மருதானை தொழில்நுட்பக் கல்லூரி சம்பந்தமாக கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமாவை பெற்றுள்ளார். இலங்கை பொதுக் கணக்காளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினரான இவர், நிறுவனத்தில் 26 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.




திருமதி. டீ.எஸ்.எஸ். தர்மபந்து
பதில் முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

இவர் களனி பல்கலைக் கழகத்தில் சமூகவியலில் முதுகலைப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை தொழிற் கல்வியில் விசேட பட்டம் மற்றும் இலங்கை பீரிஸ் முகாமைத்துவ நிறுவனத்தில் மனித வள முகாமைத்துவம் சம்தந்தமான தொழில்முறை தகைமையையும் பெற்றுள்ளார். இவர், நிறுவனத்தில் 26 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.




தலைவர் மற்றும்
சபை பணிப்பாளர்கள்
கணக்காய்வு மற்றும்
முகாமைத்துவ குழு
HM 2.1
பொது
முகாமையாளர்
HM 2.1
தலைமை
உள்ளக கணக்காய்வாளர்
முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும்
மனிதவளம்)
முகாமையாளர்
(நிதி)
முகாமையாளர்
(கொள்முதல்)
முகாமையாளர்
(விற்பனை மற்றும்
சந்தைப்படுத்தல்)
MM 1.2
உதவி/ பிரதி முகாமையாளர்
(உள்ளக கணக்காய்வு)
உதவி/ பிரதி முகாமையாளர்
நிர்வாகம் மற்றும் மனிதவளம்
(நிர்வாகம் / செயற்பாடு)
உதவி/ பிரதி
முகாமையாளர்
(நிதி)
உதவி/ பிரதி முகாமையாளர்
(கொள்முதல்)
உதவி/ பிரதி முகாமையாளர்
(விற்பனை மற்றும் விற்பனை
விளம்பரங்கள்/ விற்பனை செயல்பாடுகள்)
JM 1.1
கணக்காய்வு
அதிகாரி
மனிதவள அபிவிருத்தி/
போக்குவரத்து அதிகாரி
கணக்காய்வு அதிகாரி
(உதவி கணக்காய்வாளர்)
கொள்முதல்
அதிகாரி
சந்தைப்படுத்தல்
அதிகாரி
MA 1.1 / 2.1
முகாமைத்துவ
உதவியாளர்
முகாமைத்துவ
உதவியாளர்
முகாமைத்துவ
உதவியாளர்
முகாமைத்துவ
உதவியாளர்
முகாமைத்துவ
உதவியாளர்
PL - 3
முதன்மை நிலை
(திறமையான)
PL - 2
முதன்மை நிலை
(அரைத் திறமையான)
PL - 1
முதன்மை நிலை
திறமையற்ற
முதன்மை நிலை
திறமையற்ற
முதன்மை நிலை
திறமையற்ற
முதன்மை நிலை
திறமையற்ற
முதன்மை நிலை
திறமையற்ற

நிறுவனத்தின் கட்டமைப்பு





47 நாடு தழுவிய உர விநியோக வலையமைப்பு....

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

நாடு தழுவிய உர விநியோக வலையமைப்பு

வடமாநிலம்
கொண்டவில்
களிநொச்சி
வாரணி
ஒலுமடு
முரங்கன்

வட மத்திய மாநிலம்
மதவச்சி
ஹொரொவ்பத்தன
கிரலோகம
நொச்சியாகம
ஹிங்குரக்கொட
வெளிகந்த
பொலன்னருவ

வடமேல் மாநிலம்
ஆனமடுவ
மாஹோ
குருனாகலை
நாத்தண்டிய

மத்திய மாநிலம்
தம்புளை
நாகொல்ல
மாத்தளை
கம்பளை
ரிகில்லகஸ்கட
நுவரெலியா


கிழக்கு மாநிலம்
திருகோணமலை
கந்தலை
மட்டக்களப்பு
தெஹியத்தகண்டிய
அம்பாரை
பொத்துவில்


மேற்கு மாநிலம்
ஹூனுபிட்டிய
தொடங்கொட
மத்துகம
பெலவத்தை

சபரகமுவ மாநிலம்
கேகாலை
குருவிட்ட
எம்பிலிபிட்டிய

ஊவா மாநிலம்
மஹியங்கனை
பிபிலை
பதுளை
மொனராகலை
வெளிமடை

தெற்கு மாநிலம்
வீரவில
தெஹிகஹலந்த
பட்ட-அத்த
மெதவியங்கொட
அக்குரஸ்ஸை
கொக்கலை
சூரியவெவ





முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு

விவசாயத் துறையினை மையப்படுத்திய பொது பொருளாதார பகுப்பாய்வு

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகளின்படி, 2018ஆம் ஆண்டு இலங்கை பொருளாதார நடவடிக்கைகள் உலகளாவிய மற்றும் உள்நாட்டு இடையூறுகளால் அதிகளவில் பாதிப்படைந்துள்ளது. இந்த வருடத்தில் குறைந்த பணவீக்கத்திற்கு மத்தியில் பொருளாதாரத்தில் ஒரு சுமாரான விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த வருடம் 3.4 வீதமாக இருந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு 3.2 வீதமாக பதிவாகியுள்ளது. இந்த வளர்ச்சியானது சேவை நடவடிக்கைகளை விரிவாக்கி 4.7 வீதமாகவும் மற்றும் விவசாயத்துறையின் மீளமைப்பு நடவடிக்கை காரணமாக அதன் வளர்ச்சி 4.8 வீதமாகவும் பதிவாகியுள்ளது. தொழிற்துறை நடவடிக்கைகள் 0.9 வீதமாக கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் கட்டுமானப் பணிகளில் ஏற்பட்ட சுருக்க நிலையாகும். செலவு ரீதியிலான அணுகுமுறையின்படி, நுகர்வு மற்றும் முதலீட்டு செலவுகள் இவ்வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முதலீடானது கடந்த ஆண்டு 28.8 சதவீதமாகவும் 2018 ஆம் ஆண்டு 28.6 வீதமாகவும் நிலையாக இருந்தது. இந்த வருடம் சேமிப்பு-முதலீட்டு இடைவெளி விரிவடைந்துள்ளதோடு இது, பற்றாக்குறையினை நிரப்ப வெளிவளங்களில் அதிகளவாக தங்கியிருந்த நிலையினை குறிக்கின்றது. இலங்கை பொருளாதாரத்தின் மொத்த கொள்ளளவு 88.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது, அதே நேரத்தில் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 4,102 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதோடு இது முந்தைய ஆண்டை விட சற்றே குறைவடைந்துள்ளது. இவ்வாண்டு பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியின் மத்தியில், வேலையின்மை விகிதத்தில் ஓரளவு அதிகரிப்பும் மற்றும் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில்



ஏற்பட்ட சரிவுநிலையும் அவதானிக்கப்பட்டது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், குறிப்பாக 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஏற்பட்ட பயங்கரவாத தாக்குதல்களினால் இலங்கை குறிப்பிடத்தக்க பொருளாதார வீழ்ச்சியை சந்தித்தது. மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் ஆண்டினுடைய நான்காம் காலாண்டில் ஏற்பட்ட நாட்டின் இறையாண்மை மதிப்பீடு குளறுபடிகளினால் தொடர்ந்தும் பிரச்சினைகள் அதிகரித்தன. நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக நிதியியலில் ஒட்டுமொத்த சரிவினை ஏற்படுத்திய ஆண்டாக இருந்ததோடு, வர்த்தக பற்றாக்குறையை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் அதிகரித்துள்ளது. மொத்த பணவீக்கம் பெரும்பாலும் உணவு வகைகளின் விலை நகர்வுகளுக்கு ஏற்ப தளம்பல்நிலையில் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் நிலவிய சாதகமான வானிலை காரணமாக உணவு விலைகள் பெரும்பாலும் சரிந்தன.

கொவிட்-19 தொற்றுநோய் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அசாதாரண அழுத்தத்தை அளித்ததுடன் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தவில்லை. விவசாயத் துறை 2.4% சுருங்கிவிட்டது. விவசாயத் துறையில், மீன்பிடி மற்றும் கடல் மீன் வளர்ப்பு, காடு வளர்ப்பு மற்றும் மரம் வெட்டுதல் ஆகியவை தொற்றுநோயால் கணிசமாகக் குறைக்கப்பட்டன, அதே நேரத்தில் 2019 உலர் காலநிலையின் பாதகமான விளைவுகளால் பழங்கள் உற்பத்தியும் குறைந்தது. மறுபுறம், உள்நாட்டு விவசாய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தின் கொள்கை உதவியுடன் 2020 ஆம் ஆண்டில் ஏனைய காய்கறி, அரிசி, பழங்கள் மற்றும் தானியங்கள் அரச கொள்கை துறைகள் வெற்றிகரமான முன்னேற்ற முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளன.

பல்நிலை சமூக பொருளாதார நெருக்கடிகள்

காரணமாக குறிப்பிடத்தக்க சரிவு இருந்தபோதிலும், பாரம்பரிய விவசாயத் துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் முன்னுரிமையாக அமைந்தது. இருப்பினும், குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட விவசாய சமூகத்தின் பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளது. எனவே, பொருளாதாரத்தின் வளர்ச்சி, நவீன தொழில்நுட்ப அடிப்படையிலான விவசாயத்தின் முன்னேற்றம், நவீன விவசாய நடைமுறைகளை திறம்பட பயன்படுத்துவதற்கு மேம்பட்ட விவசாய நுட்பங்களை ஏற்றுக்கொள்வது மற்றும் புவியியல் தகவல் அமைப்புகளை திறம்பட ஒருங்கிணைத்தல் போன்ற உத்திகள் பிரிவில் உற்பத்தித்திறன் மேலோங்க விநியோகச் சங்கிலி என்பது இத்துறையின் ஒட்டுமொத்த காரணிகளாகும்.

2019.04.01 முதல் 2020.03.31 வரையிலான விற்பனைப் பயிர்கள்

உர வகைகள்	விற்பனை (மெ.டொன்)	%
நேரடி	13976.231	63%
தென்னை	801.165	4%
தேயிலை	1536.133	7%
இறப்பர்	661.025	3%
காய்கறிகள்	1830.035	8%
பழங்கள்	772.659	3.5%
பூக்கள்	11.556	0.5%
ஏற்றுமதி	302.006	1%
ஏனைய உரத் தானியங்கள்	1992.566	9%
சேதனம்	176.329	1%
மொத்தம்	**22059.705**	**100%**


விற்பனைகளின் சாராம்சம்

2019.04.01 முதல் 2020.03.31 வரையிலான நெல் சலுகை, ஏனைய பயிர், சலுகையற்ற, கலவை மற்றும் கரிம உரங்களின் விற்பனை

மாதம்	யூரியா	TSP	MOP	நெல் விற்பனை (மெ.டொன்)	சலுகையற்ற, கலவை மற்றும் உரிம உரங்களின் விற்பனை (மெ.டொன்)	மொத்த விற்பனை (மெ.டொன்)
ஏப்ரல்	11662.150	3165.550	3180.150	18007.850	289.527	18297.377
மே	21941.200	5040.900	6066.950	33049.050	2467.708	35516.758
ஜூன்	4396.200	933.600	1457.800	6787.600	4359.437	11147.037
ஜூலை	733.150	205.650	270.800	1209.600	1330.928	2540.528
ஆகஸ்ட்	315.000	76.800	94.200	486.000	745.960	1231.960
செப்டம்பர்	665.300	238.250	251.850	1155.400	1742.233	2897.633
அக்டோபர்	17947.900	4589.450	5101.500	27638.850	4177.899	31816.749
நவம்பர்	39335.600	8995.700	10918.750	59250.050	1563.884	60813.934
டிசம்பர்	17700.550	4151.200	4871.597	26723.347	1789.970	28513.317
ஜனவரி	5113.750	1002.800	1022.084	7138.634	1371.502	8510.136
பெப்ரவரி	1755.500	355.500	471.850	2582.850	1130.671	3713.521
மார்ச்	1449.750	462.100	394.250	2306.100	1089.986	3396.086
மொத்தம்	**123016.050**	**29217.500**	**34101.781**	**186335.331**	**22059.705**	**208395.036**

2019.04.01 முதல் 2020.03.31 வரையிலான சலுகை, ஏனைய பயிர், சலுகையற்ற, கலவை மற்றும் கரிம உர விறபனையின் சாராம்சம்


	கோட்ட வேறுபடுத்தல்			முன்னேற்றம்			சதவீதம்
நெல் சலுகை	Urea	TSP	MOP	Urea	TSP	MOP	(%)
	153245.000	37587.000	45660.000	123016.050	29217.500	34101.781	79%
மொத்தம்			**27000**			**22059.705**	**82%**



நிதியியல் மதிப்பாய்வு


வருமானம்

நிறுவனத்தின் வருவாய் ரூ. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உர விற்பனை 2.1 பில்லியனாக இருந்ததுடன், இது ஆண்டுக்கு ஆண்டு 12% வீதம் அதிகமாகும்.




மொத்த இலாபம்

நிறுவனத்தின் மொத்த இலாபம் ரூ. மதிப்பாய்வில் உள்ள ஆண்டில் 268 மில்லியன், ஆண்டுக்கு ஆண்டு 42மூ வீதம் அதிகமாகும். உர சலுகையை மீண்டும் நிறுவுதல் மொத்த இலாபம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும்.




நிர்வாக செலவுகள்

நிர்வாகச் செலவினங்களை நிலைப்படுத்துவதற்கு கம்பனி சிறந்த முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிர்வாகச் செலவுகள் ரூ.536ல் இருந்து ரூ.550 ஆக 3% வீதம் அதிகரித்துள்ளது.




விநியோக செலவுகள்

நிறுவனத்தின் விநியோகச் செலவுகள் வருடத்திற்கு 42 மில்லியன் ரூபாவிலிருந்து 21 மில்லியன் ரூபாவாக 50% வீதம் குறைந்துள்ளதுடன் பிரதானமாக கடனாளிகளிடமிருந்து 19 மில்லியன் ரூபா வருமானம் அகற்றுவதற்கு காரணமாக அமைந்தது.




நிதியியல் வருமானம் மற்றும் செலவுகள்

மதிப்பாய்விற்கு உட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் வருமானம் 346 மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது. செலவு ரூ. 63 ஆக அதிகரித்துள்ளது.




வரிக்கு முன்னரான இலாபம்

வரிக்கு முன்னரான இலாபம் வருடத்திற்கு 69 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் உரச் சலுகையை மீண்டும் அறிமுகப்படுத்தியதால் நிறுவனத்தின் இலாபம் அதிகரித்துள்ளது.




வரி

வருமான வரிச் செலவில் ரூ. 38 மில்லியன் மாறி வரிச் செலவு அடங்கும். ஆண்டுக்கு 64 மில்லியன் குறைவாகும்.



பங்கொன்றுக்கான வருமானம் (EPS)


ஆண்டுக்கான பங்கொன்றின் வருமானம் ரூ. 1.95 ஆகும்.



பங்கொன்றிற்கான இலாபம்

நிதியாண்டின் பங்கொன்றிற்கான இலாபம் ரூ. 0.59 ஆகும்.


பங்குக்கான பங்கி இலாபங்கள்



சொத்துக்கள் மீதான திரும்பல்கள்

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிறுவனத்திற்கு சொத்துக்கள் மீதான திரும்பல்கள் 8.28% வீதம் நிகர லாபத்தைப் பெற்றுள்ளது.


சொத்துகள் மீதான திரும்பல்கள்



பங்கு மீதான திரும்பல்கள்

மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், நிறுவனம் 0.34% வீதம் பங்குகள் மீமான திரும்பல்களை பராமரித்தது.

பங்கு மீதான திரும்பல்கள்



கூட்டாண்மை ஆட்சி

நிறுவனமானது தரமான மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகளால் உறுதியான கூட்டாண்மை பெறுமதிகளின் குறியீடு மற்றும் படிநிலை வழிகாட்டலுடன் நிறுவன மயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கை உரக்கம்பனியின் கூட்டாண்மை வழிநடத்தலை பராமரித்தலின் பூரண பொறுப்புடமையானது பணிப்பாளர் சபையின் உயர்ந்ததர அம்சங்களுடன் இணைந்ததாக உள்ளது. நிறுவனத்தின் கூட்டாண்மை வழி நடத்தலின் பொறிமுறையானது அனைத்து தரப்பினருடனும் உடன்பாட்டுடனான மதிப்பினை உறுதி செய்கிறது. கூட்டாண்மை வழிநடத்தலானது பின்வரும் விதிமுறை சட்டங்கள் மற்றும் உத்தரவுகளுடன் இணைந்ததாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. நிறுவனங்கள் சட்ட இலக்கம் 2007 இன் 07.
2. நல்லாட்சியின் அரச வர்த்தகத் திணைக்களத்தின் அரச வர்த்தக வழிகாட்டி
3. நல்லாட்சியின் அரச வர்த்தகத் திணைக்களத்தின் கொள்கை ஆவணம்

பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பானது அரசாங்க கொள்கைகளுடன் இணைந்ததாக அரசாங்க நிறுவனத்தின் திறனையும் பயனையும் உறுதி செய்தல் இது வளங்களை பாதுகாக்கும் வழி, ஒழுங்கான கணக்குகளை பராமரித்தல், கொள்முதல்களின் சரியான அறிக்கைகளை உறுதிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து சட்டரீதியான மற்றும் ஏனைய சட்ட தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் மூலம் இலக்கை அடையும்.

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்திற்கு மூலோபாய இலக்குகள் உள்ளது என்பதையும் நிறுவன செயற்பாடுகள் மூலோபாய இலக்குகளை எய்யும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அங்கு உள்ளக வழிநடத்தல்கள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான பயனுள்ள முறைமை உள்ளது என்பதையும் அந்த முகாமைத்துவ செயற்பாடுகள் பயனுள்ள முறையில் செயற்படுவதையும் வளங்களும் சொத்துக்களும் பயனுள்ள முறையில் உபயோகிக்கப்படுவதையும் முறைமையுடன் மேற்பார்வை செய்ய வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையானது வருடாந்தம் பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களின் பெறுபேறுகளை மதிப்பிடுவதுடன் நிதியியல் விடயங்களில் போதுமான விபரங்களுடன் ஈடுபட்டுள்ளவர்களை வழங்குவதுடன் முறைமை அடிப்படையில் அதே விடயத்தில் ஏனைய தேவைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையுடன் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுக்களை நியமிப்பதற்கான பொறுப்பு உள்ளது. நிறுவனமானது தரமான வழிகாட்டல்களுக்கான வழிகாட்டி, நெறிமுறைகள் குறியீடு மற்றும் கூட்டாண்மை வழிநடத்தலின் மூலோபாயங்களை அறிமுகம் செய்துள்ளது. பணிப்பாளர்கள் சபையானது செயற்பாடுகள் மற்றும் உரித்துடமையுடன் தொடர்புடைய எந்தவித முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்படாத நிலையில் அனைத்து அரசியலமைப்புகளும் வழிகாட்டிகளும் அரசாங்க சுற்றுநிரூபங்களுக்கு அமைய பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையினை நியமித்தல்

அரசாங்கத்தால் பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்படும் போது அந்த நியமனங்கள் தரம், போட்டி மற்றும் பொறுப்புணர்வு வழியில் மேற்கொள்ளப்பட வேண்டும். பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புகள், கடமைகள், பொறுப்புணர்வுகள் என்பவை பற்றிய நியமன கடிதத்தில் அதிகாரம் பெற்ற நபரினால் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டாண்மை சாதனைகள் நிறுவனத்தின் கூட்டாண்மை வழிநடத்தல், முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொறுப்புடைமைகளுக்கு நியமிக்கப்படுவர்.

பணிப்பாளர் சபை கூட்டங்கள்

பணிப்பாளர்கள் சபையானது 2019-2020 ஆம் நிதியாண்டில் 11 கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் பணிப்பாளர் சபை தாள்கள் ஊடாக முகாமைத்துவம் ஆனது சரியான நேரத்திற்கு குறிப்பிட்ட தகவல்களை சமர்ப்பித்துள்ளது.

பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் கொடுப்பனவு அளவுகளுக்கு அமைய வழங்கப்படுகின்றன. இந்த கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்களில் பணிப்பாளர்கள் தலையிட முடியாது.

தலைவர்

பூரண கூட்டாண்மை கட்டமைப்பில் தலைவரின் பங்கானது மிகவும் முக்கியமானதாக திகழ்வதுடன் அவர் சரியான வழியில் நிறுவனத்தை செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் கூட்டாண்மை பராமரிப்பினை வழிநடத்தல் ஒவ்வொரு பணிப்பாளரையும் சமமாக நடத்துதல், சரியான முறையில் பொறுப்புகளை விநியோகித்தல், சக்தியையும் அதிகாரத்தையும் சமப்படுத்தல், பணிப்பாளர் சபை கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதை உறுதிப்படுத்தல், இந்த கூட்டங்களுக்கு அவர் தலைமை வகித்தல் ஆகியவை தொடர்பான செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடத்தப்படுவதை தலைவர் உறுதிப்படுத்த வேண்டும். அவர் தான் திறமைப் பெற்ற துறைகளில் பங்களிப்பினை வழங்குவதுடன் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடுவதில் இருந்து விலகி இருத்தலுடன் மேற்பார்வை பங்கினை வகித்தல் ஆகியவற்றுடன் அனைத்து பணிப்பாளர்களும் தீவிர பங்கினை வகிப்பதை ஆதரிக்க வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையின் செயலாளர்

பணிப்பாளர்கள் சபையில் தொழில்சார் தகைமை பெற்ற செயலாளர் பணிப்பாளர்கள் சபை கூட்டங்கள், மற்றும் வருடாந்த பொது கூட்டங்கள், ஆகியவை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல், நேரத்திற்கு நேரம் பொருத்தமான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு மேம்படுத்தல் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பார். பணிப்பாளர் சபை கூட்டங்களை நடத்துவது பின்பற்றப்படுவது, தொடர்பான நடைமுறைகளை செயலாளர் உறுதிசெய்வதுடன் பணிப்பாளர்சபை பயனுள்ள வகையில் இயங்குவது, பணிப்பாளர் சபை தாள்கள் நேரத்திற்கு விநியோகிக்கப்படுவது, பொறுப்புணர்வு தொடர்பான வழிகாட்டல்கள், பணிப்பாளர் சபையுடன் தொடர்புடைய தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் உதவும் வகையிலான அறிவுறுத்தல்கள் என்பன அவரால் வழங்கப்படும்.

பொதுமுகாமையாளரும் சிரேஷ்ட முகாமைத்துவமும்

பொதுமுகாமையாளரும் அவரது சிரேஷ்ட முகாமைத்துவமும் நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவத்தை தாங்கிச் செல்வதற்கு பொறுப்புடையதாக இருப்பர். அவர்கள் பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு அமைய கொள்கைகளை திறப்பட ஆரம்பித்து கொடுப்பனவு கட்டண பிரேரணை அறிவுறுத்தல்கள் பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினருக்கான கட்டணங்களை உறுதி செய்வதற்கு பின்பற்றப்படுகின்றன.

நிதியியல் அறிக்கைகள்

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் வருடாந்த நிலையையும் பெறுபேறுகளையும் மிகவும் துல்லியமான முறையில் குறிப்பிடும் வகையிலான வருடாந்த நிதியியல் அறிக்கைகளை தயாரிப்பதற்கு பொறுப்புடையவர்களாவர். இலங்கையின் நிதியியல் பதிவு தரங்கள் மற்றும் நிறுவனங்களின் 2007 இன் 7 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும். நிதியியல் அறிக்கைகள் பொது முகாமையாளரை உள்ளடக்கியதாக பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் தேவைப்படும் போது முக்கியமான தகவல்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

வருடாந்த கணக்காய்வு

பட்டயக் கணக்காளர்களின் பட்டியலில் கணக்காய்வாளர்:. திறைசேரியினால் பரிந்துரைக்கப்படும் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைப்படி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிப்புற கணக்காய்வாளரால் கம்பனியின் வருடாந்த கணக்காய்வு செய்யப்படுகிறது. வருடாந்த கணக்காய்வு அறிக்கையானது பணிப்பாளர் சபையினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் வருடாந்த சம்மேளனத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படும். கணக்காய்வு நடவடிக்கையின் போது பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமான தீர்மானத்தில் ஏற்படும் பாதிப்புக்களின் ஆலோசனை மற்றும் ஏனைய சேவைகள் வழங்குவதில் விலகியிருப்பதோடு, இவ்வெளிக் கணக்காய்வாளர்கள் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்படுவார்கள்.

கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு

நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது நிர்வாகப் பணியில் பணிப்பாளர்கள் சபைக்கு உதவுவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த குழுவானது திறைசேரியில் நிதியியல் தகைமை பெற்ற பிரதிநிதியுடன் பணிப்பாளர் சபையின் 3 நிறைவேற்று தகைமையற்ற அங்கத்தவர்களை உள்ளடக்குகிறது. இந்த பிரதிநிதி கணக்காய்வு குழுவின் தலைவர் பதவியை வகிக்கிறார்.



இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவ செயன்முறைகள்

நிறுவனத்தின் இடரை வெளிப்படுத்துவதற்கான அடையாளமும் அங்கீகாரமும் இடர் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. நிறுவனமானது நஷ்டங்களை புறக்கணிக்கவும் நஷ்டங்களால் ஏற்படும் பாதிப்புகளை புறக்கணிக்கவும் பயனுள்ள திட்டத்தை தயாரிக்கிறது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. இடர் முகாமைத்துவமானது இடர்களை அடையாளம் காணும் முகமாக தெளிவான ஒரு கட்டமைப்பு வழியை வழங்குகிறது. அனைத்து கட்டுப்பாடுகள் தொடர்பாக தெளிவான ஒரு புரிந்துணர்வினை அடைவதற்கு நிறுவனமானது மதிப்பீடு செய்து அதற்கு முன்னுரிமை அளிப்பதுடன் இந்த இடர்களை குறைப்பதற்கு தேவையான படிகளை எடுக்க வேண்டும்.

நிறுவனமானது இந்த கவனக்குறைவினை அடையாளம் காணவும் மதிப்பீடு செய்யவும் குறைக்கவும் மாற்றவும் உடனடியாக விருத்தி செய்யப்பட்ட செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும். எமது இடர் முகாமைத்துவ முறைமையின் பிரதான நோக்கமானது எமது வர்த்தகம் சார்ந்த செயற்பாடுகளின் இடர்கள் தொடர்பாக பூரண அவதானம் செலுத்தி உதவுவதாகும். இடர்களை அடையாளம் காண்பதுடன் மதிப்பீடு செய்வதும் முதன்மையானதாகும். பல விடயங்கள் செய்யப்படுவது அவசியம். இதன் பின்னர் அடையாளம் காணப்பட்ட இடர்களை புறக்கணிக்கவும் குறைக்கவும் மாற்றவும் திட்டமிடப்பட்ட மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது நிறுவன செயற்பாடுகளை மையமாகக் கொண்ட பயனுள்ள இடர் முகாமைத்துவ முறைமையை உறுதி செய்ய வேண்டும்.

பிரதான இடர் காரணிகள்

எமது நிறுவனத்தில் சில இடர் காரணகளுக்கான தன்மைகள் காணப்படுவதுடன் செயற்பாட்டு அமைப்பில் நிச்சயமற்ற நிலையில் இவை நிலவுகின்றன. நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படும் அந்த இடர்காரணிகளை குறைப்பதற்கான படிகள் பற்றி பின்னர் கலந்துரையாடப்படும்.

மூலோபாய இடர்பாடுகள்

இடர்கள் எமது மூலோபாய நோக்கங்களில் பாதிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாகவும் பயன்படுத்தப்படாத வாய்ப்புகள் காரணமாகவும் ஏற்படும் போது மூலோபாய இடர்கள் என அழைக்கப்படுகின்றன. நிறுவனத்தின் இலக்குகளுக்கு அமைய பணிப்பாளர்கள் மேற்கொள்ளும் பிரதான முடிவுகளில் இருந்து

பிரதானமாக இவ்வகையான இடர்கள் எழுகின்றன. மூலோபாய இடரின் பின்னால் உள்ள பிரதான தத்துவமானது எமது பிரேரிக்கப்பட்ட நிறுவன இலக்குகளை அடைவதில் தோல்வியாகும்.

மூலோபாய அபாயத்தின் பின்னணியில் உள்ள முக்கிய கருத்து, எங்கள் முன்மொழியப்பட்ட நிறுவன இலக்குகளை அடையத் தவறியதாகும். இதைக் கருத்தில் கொண்டு, இயக்குநர்கள் குழுவும் நிர்வாகக் குழுவும் ஐந்தாண்டு எதிர்கால விரிவான திட்டம், 3 ஆண்டு சுற்றறிக்கைத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் முறையான பின்தொடர்தல் மதிப்பாய்வுகளை நடத்துகின்றன.

வர்த்தக இடர்கள்

இந்த இடர்கள் உற்பத்தியை பாதிக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல், உற்பத்திகளின் விற்பனை, பொருளாதார இடர்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய இடர்களை உள்ளடக்குவதுடன் தொழில்நுட்ப சூழல் மற்றும் வாடிக்கையாளர் தெரிவுகள் மாற்றங்களினால் ஏற்படும் இடர்கள். எமது வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான உள்ளக இடர்கள் பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்யக்கூடிய இயலாமை மற்றும் புதிய உற்பத்திகளுடன் தொடர்புடைய இடர்கள் பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்வதற்கான இயலாமை 4 மடங்காகும். அதாவது வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொள்வதற்கான இயலாமை, தொழில்நுட்பம், கைத்தொழில் மற்றும் பொருளாதார காரணிகள் மற்றும் தத்துவார்த்த தேவைகள்.

நிறுவனமானது வாடிக்கையாளர்களின் மாற்றங்கள் நிமித்தம் வாடிக்கையாளர்களுக்கு திருப்தி மற்றும் மதிப்பீடுகள் மீதான திட்டமிட்ட புள்ளிவிபர ஆய்வினை நடத்துகிறது. நிறுவனத்தின் சட்ட விதிகள் மற்றும் சிபாரிசுகளின் எதிர்கால மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு நிறுவனமானது முன்னணி சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களான அரசாங்க தென்னை ஆய்வு நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுடன் நெருங்கி செயற்படுகிறது. சந்தை மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப பூரண கற்கைகளின் பின்னரே புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வர்த்தகமற்ற இடர்கள்

இந்த இடரானது பிரதான வர்த்தகத்துடன் தொடர்பற்று இருப்பதுடன் இது பிரதானமாக நீண்டகால நிதியியலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிதியியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலத்துக்கான நிதி பெறுதலை கருத்திற்கொண்டு எதிர்கால 5 வருடங்களுக்கான செயற்றிட்டம் எனும் காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பணம் உள்ளே வருவதும் நிறுவனத்தில் இருந்து வெளியே செல்வதும் திட்டமிட்ட வருடாந்த வரவு - செலவு திட்டம் மூலம் திறனுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளதுடன், கொள்முதலீட்டு திட்டம் மற்றும் எந்தவித உடனடி பணத்தேவைகளும் எழும்பமாட்டாது.

செயற்பாட்டு இடர்கள்

நிறுவனத்தின் அடிமட்டப்பகுதியில் என்ன நடக்கிறது என்பது தொடர்பான யோசனையை இது உங்களுக்கு அளிக்கிறது. செயற்பாட்டு இடர்கள் நேரடியாக நிறுவனத்தின் பிரதானமாக உள்ளக வளங்கள், முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களில் தங்கியுள்ளது. அத்துடன் இது இயற்கை சூழ்நிலைகளான அதாவது கடைகளின் பன்முக செயற்பாடுகள் மற்றும் இயந்திரம், ஊழியர்களுக்கான செலவு மற்றும் மோசமான காலநிலை செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

- பாரிய தீ பாதுகாப்பு முறையானது போதுமான தீயணைப்பாளர்கள் மற்றும் எச்சரிக்கை முறைமையை கொண்டதாக நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது.

- தீ காரணமாக சேதங்கள் ஏற்படும் போது அதனை ஈடு செய்யும் முகமாக நிறுவனமானது தீ காப்புறுதி காப்பீடு ஒன்றினை கொள்வனவு செய்துள்ளதுடன் மேலதிக இலத்திரனியல் காப்புறுதியை அல்ட்ரா தன்மையான ஆய்வுகூட சாதனத்துக்காக கொண்டுள்ளது.

- கொள்கை மற்றும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் முகமாக பண பாதுகாப்பு காப்புறுதியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு இறக்குமதி செய்யப்படும் பொதி சரக்கு கப்பலுக்கும் போதுமான கடல் காப்புறுதி சான்றிதழ்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

- பணம் மற்றும் பணம் தொடர்புபடாத ஊழியர் திட்டங்களுக்கு அமைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கான செலவு குறைந்த மட்டத்தில் உள்ளது.

நிதி இடர்கள்

பண சாதனத்தை பயன்படுத்துவதில் கடன் இடர், திரவ இடர் மற்றும் சந்தை இடர் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நிறுவனமானது பண இடரினை கொண்டுள்ளது.

கடன் இடர்

நிறுவனத்தின் பொறுப்புகளுக்கு அமைய தொடர்புடைய தரப்பினர் உடன்படாத பட்சத்தில் கடன் இடர் ஆனது நிறுவனத்தின் நிதியியல் நஷ்டத்துடன் தொடர்புடைய இடர் ஆகிறது. கடன் இடர் ஆனது பிரதானமாக

நிதியியல் நிறுவனங்களுடன் கடன் மற்றும் பண வைப்புகள் மீதான விற்பனைகள் காரணமாக கடன் இடர் எழுகிறது.

- விநியோகஸ்தர்களை நியமிப்பதற்கு முன், பிராந்திய விற்பனை முகாமையாளர்கள், பிரதான உள்ளக தணிக்கையாளர்கள், நிதி முகாமையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் சட்டப் பணியாளர்கள் அடங்கிய குழுவினால் ஒவ்வொரு நபரின் திறனைப் பற்றிய விரிவான பகுப்பாய்வை நடாத்தும்.

- கடன் வசதிகளை வெளியிட முன்னர் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வங்கி உத்தரவாதங்கள் பெறப்படுகின்றன.

- கடன் காலங்கள் மற்றும் பெறுமதி வரையறைகள் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கடன் ஆய்வாளர்களினால் செய்யப்படும் முடிவுகளுக்கு அமைய குறிப்பிடப்படும்.

திரவ இடர்கள்

கம்பனிக்கு அதன் நிதிக் கடமைகளை நிறைவேற்ற இயலாமை திரவ இடர்கள் என்று அழைக்கப்படுகிறது. திரவ இடர்களை நிர்வகிப்பதற்காக நிறுவனத்தின் கொள்கையானது, சாதாரண மற்றும் கணிக்க முடியாத பொறுப்புகளை சந்திக்க போதுமான பணத்தொகை இருப்பதை உறுதி செய்வதாகும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கான விரிவான திட்டமும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான செயல் திட்டமும், நிறுவனத்தின் பணப் புழக்கங்கள், முன்பே இருக்கும் பணப் புழக்கங்கள் மற்றும் வெளிச்செல்லும் பண வரவு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகின்றன. நிறுவனம் அந்த பணப்புழக்கங்களை நெறிப்படுத்தியதுடன் வருடாந்த அறிக்கை மற்றும் திட்டமிடல் திட்டத்தின் மூலம் அனைத்து நிதி பொறுப்புகளையும் தீர்ப்பதற்கான வசதிகளை வழங்கியுள்ளது

சந்தை இடர்

ஏற்ற இறக்கமான வெளிநாட்டு பணப்பரிமாற்றத்திற்கு இணங்க வட்டி வீதங்கள் ஏறி இறங்குவதால் சந்தை விலையின் ஏற்ற இறக்கமானது சந்தை இடர் என அழைக்கப்படுகிறது. இது நிறுவனத்தின் வருமானம் மற்றும் நிதியியல் சாதனத்தை பராமரிக்கும் கொள்ளளவை பாதிக்கிறது.

நாணய பரிமாற்று இடர்

பரிமாற்று நாணய இடரானது அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் வலு ஏறி இறங்குவதால் நிறுவனத்தை பரிமாற்று நாணய இடருக்கு உள்ளாக்குகிறது.

வட்டி இடர்

குறிக்கப்பட்ட வட்டி வீதம் மற்றும் வங்கி வைப்புகளுக்கான வட்டி வீதத்தின்கீழ் கடன் கொள்வனவுகளுக்கான சந்தை வட்டி வீதங்களுக்கான ஏற்ற இறக்கம் வட்டி இடர் என அழைக்கப்படுகிறது.

ஒழுக்காற்று இடர்

உரத்தின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு தொடர்புடைய அரசாங்க விதிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களான அதாவது தென்னை ஆராய்ச்சி நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் போன்றவற்றினால் வலியுறுத்தப்படும் சிபாரிசுகள் என்பனவற்றில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது இதன்படியே நடப்பதற்கு நிறுவனத்திற்கு ஒழுக்காற்று அதிகாரம் உள்ளது. இந்த ஒழுக்காற்று அமைப்பில் ஏதாவது சாத்தியமான மாற்றத்தினை அடையாளம் காண்பதற்கு நிறுவனமானது இந்த நிறுவனங்களுடன் நெருங்கி செயற்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த இடர் காரணிகள் இந்த பட்டியலினை வரையறை செய்யாததுடன் நிறுவனமானது இவ்வாறான மாற்றங்கள் தனது செயற்பாடுகளை பாதிக்கக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக உள்ளது.

பிராந்திய அறிக்கைகள்

மனிதவள கொள்கைகளில் சிறந்த நடைமுறைகள்

எமது மனித வளங்கள் முகாமைத்துவ மூலோபாயங்கள் திறைசேரி மற்றும் நேரியல் அமைச்சினால் விநியோகிக்கப்படும் கடை மற்றும் அலுவலகச் சட்டம், வேதன சபை அவசர வழிகாட்டல்களுக்கு இணங்கவும் தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள சம்பந்தப்பட்ட தொழில் சட்டங்களுக்கு அமையவும் ஒழுங்காக தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்வாக ஒழுக்கக்கூற்று விதிகள் மற்றும் நாட்டின் மின் குறியீட்டினை கடைப்பிடிக்கும் முகமாக நிறுவனமானது அதன் மனித வளங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்வதுடன் விடா முயற்சியுடனும் வெளிப்படையாகவும் நிறுவனத்தின் கட்டமைப்பை தோற்றுவிப்பதுடன் சம்பளங்கள் மற்றும் பணிநிலை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு எதிரான இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றை நிரப்புவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய பதவியுயர்வுகளை வழங்குவதுடன் ஊதியப் பொதிகளை அமைத்துக் கொள்ளல்.

ஊழியர் பயன் திட்டம்

அரசாங்க வழிகாட்டல்களுக்கு இசைவாக நிறுவனமானது மொத்த சம்பளத்தில் 15% ஐ (அடிப்படை + வாழ்க்கைச் செலவு) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) மொத்த சம்பளத்தில் 3% I (அடிப்படை + வாழ்க்கைச் செலவு) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பங்களிப்புச் செய்கிறது.

பயன் திட்டத்தின் அறிமுகம்

இலங்கையின் கணக்கியல் தரங்களுக்கு அமைய தகைமை வாய்ந்த மதிப்பீட்டாளர் ஒவ்வொரு வருட நிதியியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலாபப் பொறுப்பினை கணக்கிடுவதுடன் ஒவ்வொரு ஊழியரினதும் முதலாவது சேவை வருடத்தில் இருந்து ஓய்வுதிய நலன் பொறுப்புக்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படும்.

ஊழியர் செயலூக்கம்

நிறுவனமானது மனதுக்கு இசைவான பணி சூழலை உருவாக்குதல், வசதிகளை மேம்படுத்தல்,அழுத்தத்தை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் தனது ஊழியர்கள் தமது ஆற்றலையும் உற்பத்தித்திறனையும் உச்சபட்சமாக வெளிப்படுத்துவதற்கு ஊக்கம் அளிப்பதில் மிகவும் அவதானமாக இருப்பதுடன் நிறுவனத்தின் நாளுக்கு நாள் வர்த்தக செயற்பாடுகளில் ஊழியர்களுக்கு உரித்துடைமையில் வலுவான உணர்வினை அளிப்பதுடன் நிறுவனத்தின் குறுகிய மற்றும் நீண்ட தவணை இலாப பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க தேய்வு ஏற்பட்ட போதிலும் இதனை பின்பற்றல்.

நிதியியல் நலன்கள்

- பெறுபேறுகள் மதிப்பீட்டுக்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு அமைய ஒவ்வொரு ஊழியரினதும் தனிப்பட்ட பெறுபேறுகளை அடையாளம் காணும் ஒரு வருடாந்த ஊக்குவிப்பு திட்டம்.

- நிதியியல் அழுத்தத்தை குறைக்கும் முகமாக தகுதியான ஊழியர்களுக்கு தேநீர், உணவு மற்றும் ஆடை போன்றவற்றுக்கு கொடுப்பனவுகளை வழங்கல்.

- தொழிலிடத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் ஆண்டில் அதிகளவு பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைகளுக்கு அவற்றுக்கீடாக பணத்தினை வழங்குதல்.

- தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதுடன் கையடக்க தொலைபேசிகள் மற்றும் நேரடித் தொலைபேசிகளுக்கான பற்றுச்சீட்டுக்குரிய தொகையை வழங்குதல், மீண்டும் நிறுவனத்தின் சார்பான வர்த்தக செயற்பாடுகள் காரணமாக ஊழியர்கள் மீது ஏற்படும் சுமையை இது குறைக்கிறது.

- ஊழியர்களுக்கான பொறுப்பினை புரிந்து கொள்ளும் முகமாக வேலைக்காக சிறிய பொருளாதார தொகையினை வழங்குதல், எமது ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்வி, கலாசாரம் அல்லது விளையாட்டு செயற்பாடுகளுக்கு நிதியியல் உதவிகளை வழங்குதல்.

ஏனைய நலன்கள்

- விநியோகத்தில் இலக்குகளை அடையும் பிராந்திய முகாமையாளர்களுக்கு உத்தியோகப்பூர்வ வாகனங்கள் வழங்கப்படும்.

- மாவட்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று ஊழியர்களுக்கு சோர்வினை குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முகமாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன.

- அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் சுகாதார சேவையினை மேம்படுத்தும் முகமாக மருத்துவ காப்புறுதி திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது.

- அதிகளவில் விநியோகம் செய்யும் மாவட்ட விநியோக நிர்வாகிகளை ஊக்குவிக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்கள் வழங்கப்படும்.

- திறந்த தகவல்தொடர்பு கொள்கையினூடாக கீழிருந்து உயர்மட்ட வரை தகவல்கள் சுதந்திரமாகவும் மற்றும் நேர்மாயாகவும் செல்ல ஊக்கப்படுத்தும் அச்சமற்ற சூழலை ஊக்கப்படுத்தும் நிறுவன கலாசாரத்தை உருவாக்குதல்.

- மனநலம் மற்றும் தொழில்முறை திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆன்மீக மற்றும் திறன் தொடர்பான பயிற்சித் திட்டங்கள் எமது அனைத்து ஊழியர்களுக்கும் வழக்கமான அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி திட்டங்கள்

- பயனுள்ள உள்ளக தணிக்கை குறித்த பட்டறை
- MS அணுகுமுறையைப் பயன்படுத்தி தரவு முகாமைத்துவம்
- PHP மற்றும் My SQL பயன்படுத்தி இணையதள அபிவிருத்தி
- சேவை சந்தைப்படுத்தல் குறித்த பட்டறை
- வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனிக்காக 'சிறந்த தலைமைத்துவத்திற்கான வாழ்க்கை விஞ்ஞானம்' குறித்து நிறுவன பயிற்சி பட்டறை
- வருமானம் மற்றும் வரி கணக்கீடுகள் 2018/2019
- நிறுவன - பாதுகாப்பு பயிற்சி
- தணிக்கை விசாரணைகள் (தணிக்கைக்கு நான் எவ்வாறு பதிலளித்து செயல்திறனை மேம்படுத்துவது?)
- கணினி வன்பொருள் மற்றும் கணினி பராமரிப்பு
- ஒப்பந்தச் சட்டம்
- வரி கணக்கீடு செயல்முறை
- SLFRS -15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களின் மூலம் பெறும் வருமானம்
- தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் பற்றிய மாநாடு
- அறிவியல் டிப்ளமோ
- வரி விழிப்புணர்வு
- டீசல் ஜெனரேட்டரின் பராமரிப்பு
- அலுவலக உதவியாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்
- போக்குவரத்து முகாமைத்துவம்
- தனிப்பட்ட கோப்புகளை கையாளுதல் மற்றும் பராமரித்தல்

- அலுவலக பணியாளர்களை வரவேற்பு (எதிர்கால அணுகுமுறைக்காக) தொலைபேசி திறன்கள் மற்றும் நன்நெறிப் பயிற்சி
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் நிறுவன செயல்திறன் பற்றிய கருத்தரங்கு
- ஒப்பந்த நிர்வாகம் பற்றிய டிப்ளமோ
- ISO/IEC 17025: 2017 ஆய்வக முகாமைத்துவ அமைப்புகளின் உள்ளக தணிக்கை குறித்து பயிற்சி
- வருடாந்த பங்கு சரிபார்ப்பு பட்டறை
- சபை உதவியாளர்களுக்கான கொள்முதல் நடவடிக்கை


வயது கட்டமைப்பின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கான செலவுகள் (பயிற்சி)		
Age Category	**Total**	**Investment (Rs:)**
20-30	13	127,882.90
31-40	51	175,629.70
41-50	97	279,520.15
51-60	35	91,287.30
TOTAL	**196**	**674,320.05**


ஆண் பெண் அடிப்படையில் பணியாளர் முதலீடு

- ஆண் - Rs: 454,082.10
- பெண் - Rs: 220,237.95

எமது பணியாளர்களின் அமைப்பு

லக்பொஹொர உறுப்பினர்களின் முழு அர்ப்பணிப்பே நிறுவனத்தின் வெற்றியின் ரகசியம். எங்களிடம் 389 பணியாளர்கள் குழுவொன்று இருக்கின்றது. அவர்கள் நிறுவனத்தின் முக்கிய மூலோபாய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைவதில் உறுதியாக உள்ளனர். வேலை அடிப்படை, சேவை பிரிவு, பிரதேச மற்றும் ஆண் பெண் ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் வேலை வகைப்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது.





எமது பணியாளர்களின் அமைப்பு
(அனுமதிக்கப்பட்ட மற்றும் இருக்கும் இடங்கள்)

சேவை மட்டம்	வகை	சம்பள குறியீடு	31.03.2020 ஆண்டில் அனுமதிக்கப்பட்ட இடங்கள்	31.03.2020 ஆண்டில் இருக்கும் இடங்கள்	
				நிரந்தரம்	ஒப்பந்தம்
சிரேஷ்ட	சிரேஷ்ட முகாமையாளர்	HM 2.1	1	0	
	சிரேஷ்ட முகாமையாளர்	HM 1.2	9	6	
	முகாமையாளர்	MM 1.2	28	18	
மூன்றாம் நிலை	கனிஷ்ட முகாமையாளர்	JM 1.1	37	30	1
இரண்டாம் நிலை	முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்)	MA 2.1	11	7	
	முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமற்ற)	MA 1.1	165	156	
ஆரம்ப நிலை	முதன்மை நிலை (திறமையான)	PL 3	58	75	
	முதன்மை நிலை (அரை திறமையான)	PL 2	6	4	
	முதன்மை நிலை (திறமையற்ற)	PL 1	99	92	
மொத்தம்			**414**	**388**	**1**


மாகாணங்களுக்கிடையில் காணப்படும் ஊழியர்கள்		
இலக்கம்	மாகாணங்கள்	ஊழியர்களின் எண்ணிக்கை
1	வட மற்றும் வடமத்திய மாகாணம்	46
2	வடமேல் மாகாணம்	11
3	தென் மாகாணம்	30
4	மத்திய மாகாணம்	32
5	கிழக்கு மாகாணம்	18
6	ஊவா மாகாணம்	14
7	சப்ரகமுவ மாகாணம்	14
8	மேல் மாகாணம் (நிர்வாக காரியாலயம் உட்பட)	223
	மொத்தம்	**388**

பணியாளர்களின் கலவை (மாகாண ரீதியில்)



நிரந்தர பணியாளர்களை பாலின அடிப்படையில் பகிர்ந்தளித்தல்				
இல.	பதவி	ஆண்	பெண்	மொத்தம்
1	சிரேஷ்ட முகாமையாளர்	4	2	6
2	உதவி முகாமையாளர்	13	5	18
3	கனிஷ்ட முகாமையாளர்	24	6	30
4	முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்)	4	3	7
5	முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமற்ற)	83	73	156
6	முதன்மை நிலை (திறமையான)	75	0	75
7	முதன்மை நிலை (அரை திறமையான)	4	0	4
8	முதன்மை நிலை (திறமையற்ற)	92	0	92
	மொத்தம்	**299**	**89**	

31மார்ச்2020 ஆம் ஆண்டின் நிலவரப்படி ஊழியர்களின் பால்நிலை பரம்பல்



வயது அடிப்படையில்	
வயது வகை	மொத்தம்
20 - 30	38
31 - 40	85
41 - 50	150
51 - 60	115
	388

வயது அடிப்படையில்



ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

ஊழியர்களின் சுகாதாரம், கம்பனியின் தொடர்ச்சியான செயல்திறனுக்காக அத்தியாவசிய காரணியாகும். எமது ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயல்படுவது எமது வியாபார நடவடிக்கைகள் உயர்மட்டத்திற்கு கொண்டுவரும் செயல்முறையின் அடிப்படையாகும். இம்முக்கிய உயர் காரணிகளை அடைவதற்கும், பயனுள்ள முடிவுகளை அடைவதற்கும், ஊழியர்களின் இன்னல்களை குறைப்பதற்கும் மற்றும் கம்பனியின் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் போன்ற ஊழியர் நம்பகத்தன்மையை அதிகரித்தல் போன்ற பயனுள்ளவற்றை வழங்கியுள்ளோம். இம்முயற்சி வேலைத்தள பாதுகாப்புக்கான சர்வதேச தரத்திற்கு இணையாவதோடு, இதனூடாக ஊழியரின் சுகாதாரம், பாதுகாப்பு அல்லது சிறந்த பராமரிப்புக்கிடையில் நீக்கவேண்டிய தற்செயலான சம்பவமொன்றில் அவை உடனடியாக விசாரணை செய்வதோடு அவ்வாறான சம்பவம் மீண்டும் நிகழும் வாய்ப்பை இல்லாதொழித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நலன்புரி மற்றும் மனிதவளங்கள்

நாம் இயங்கக்கூடிய சூழல் மாதிரியை தோற்றுவிப்பதன் முக்கியத்துவத்தை நாம் மிகவும் நன்கு புரிந்து கொண்டுள்ளதுடன் இந்த சூழலானது பெறுபேறுகளின் மேம்பாடு சுயமுன்னேற்றம் தலைமைத்துவம் மற்றும் எமது பெறுமதி மிகுந்த வாடிக்கையாளர்கள்

எதிர்நோக்கும் சவால்களை பொறுப்பேற்றல் ஆகியவற்றுக்கு உதவியும் ஆதரவும் வழங்குவதுடன் இதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவமானது மிகச்சிறந்த முன்னுரிமையை வழங்கி வருகிறது.

மேலதிகமாக எமது ஒட்டுமொத்த மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒரு பகுதியாக பல துறைகளிலும் உள்ளக மற்றும் வெளியக ஆகிய இரு தரப்பு தொழில்சார் சேவைகளை பயன்படுத்துவதுடன் தொழில்நுட்ப மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கான தொனிப்பொருள்கள் மற்றும் உந்துதலுடன் அதேவேளை அனுபவமூடாக செயலூக்கத்தை அதிகரித்தல், கற்றலை ஊக்குவித்தல், ஆலோசனை கொள்ளளவை மேம்படுத்தலும் ஆகும். மேலும், கம்பனி 2010 ஆம் ஆண்டு முதல் ICT பயிற்சி வேலைத்திட்டமொன்றை செயல்படுத்தியிருப்பதோடு, கம்பனி அனுசரணையின் கீழ் இப்பயிற்சி வேலைத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ICDL சான்றிதழ் வழங்கப்பட்டது. கம்பனியின் உற்பத்தி தொடர்பாக விரிவான புரிந்துணர்வொன்றை பெற்றுக்கொள்ளும் நூற்றுக்கணக்கான ஊழியர்களுக்காக பரந்து காணப்படுவதாலும், விநியோகப் பிரிவின் ஊழியர்களுக்காக பிரதான காரியாலயத்தில் மற்றும் பிராந்திய பண்டகசாலைகளில் விசேட பயிற்சித் திட்டங்களினால் மேற்கொள்ளப்படுவதோடு, அங்கு அவர்களுக்கு இயற்கை உரம் தொடர்பான மிகச்சிறந்த பின்னணி அறிவைப் பெற்றிருத்தல்.

கற்றல் மிக முக்கியமானது என்பதோடு, புத்தகங்கள் அதில் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஊழியர்களுக்காக சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கு நிறுவனம் தூரநோக்கத்தில் செயற்படும் பயனாக சமீபத்திய புதிய அறிவுடன் மற்றும் அறிவை மேம்படுத்திக்கொள்ள ஊழியர்களுக்காக நூலக வசதிகளை வழங்கப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகூடத்தில் ஆய்வுகூட ஊழியர்கள் மிகவும் சக்திவாய்ந்த அதிகளவு தொழில்நுட்ப சீரான உர ஆய்வாளர்களாக தரப்படுத்தப்படும் பொருட்டு விசேட தொழில்நுட்ப பயிற்சித் திட்ட நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

பிடிமானம்

நிறுவனமானது இந்த நிதியியல் ஆண்டில் குறைந்த ஊழியர் செலவு மற்றும் குறைந்த மட்ட ஊழியர் தேய்வினை பேணுவதில் சாதனை நிலைநாட்டியுள்ளது தொடர்பாக பெருமை கொள்வதுடன் ஊழிய அபிவிருத்தி, சமத்துவம், நேரம் மற்றும் கற்கை சூழலுக்கான உருவாக்கம் ஆகியவற்றின் மூலம் தொழில் திருப்தி தன்மையை ஏற்படுத்தியுள்ளதுடன் இங்கு வசதிகளும் நலன்களும் தொழில்சார் திறமையை அபிவிருத்தி செய்யும் முகமாக வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன.

கணக்காய்வு குழுவின் அறிக்கைகள்

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் பணிப்பாளர்கள் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட பணி விதிகளுக்கு அமைய கணக்காய்வு குழுவானது செயற்பட்டுள்ளது.

குழுவின் அமைப்பு

கணக்காய்வு குழுவானது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று நிறைவேற்று தகைமையற்ற பணிப்பாளர்கள் மற்றும் குழுவின் தலைவராக திறைசேரி பிரதிநிதி ஒருவரையும் கூட்டங்களில் பங்குபற்றும் அவதானிப்பாளர்களையும் கொண்டுள்ளது. கணக்காய்வு திணைக்களத்தின் பிரதிநிதி மற்றும் விவசாய அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வுக் குழுவின் மேற்பார்வையில் செயல்படுகின்றது. 2019/2020 ஆம் ஆண்டுக்கான இக்குழு பின்வரும் பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

- **திருமதி. விசாகா அமரசேகர**
  குழு தலைவி
  (12-02-2019 to 03-12-2019)
- **திரு. ஈ.ஜீ.எச்.எம். ரணசிங்க**
  குழு தலைவர்
  (15-01-2020 முதல் தொடர்தல்)
- **திரு. எம்.பீ. சரத் அபேரத்ன**
  குழு அங்கத்தவர்
  (12-02-2019 to 03-12-2019)
- **திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி**
  குழு அங்கத்தவர்
  (12-02-2019 to 15-01-2021)
- **திரு. எல்.ஜீ. சமரவிக்கிரம**
  குழு அங்கத்தவர்
  (13-01-2020 முதல் தொடர்தல்)

குழு கூட்டங்கள் மற்றும் வரவுகள்

தணிக்கைக் குழு நிதியாண்டில் மூன்று முறை தவறாமல் கூடுகிறது. கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள் பின்வருமாறு.

திகதி	2019.04.29	2019.07.12	2020.03.06
திருமதி. எம்.டீ.ஐ.வீ. விசாகா அமரசேகர	✓	✓	-
திரு. ஈ.ஜீ.எச்.எம். ரணசிங்க	-	-	✓
திரு. எம்.பீ. சரத் அபேரத்ன	✓	×	-
திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிறி	✓	✓	✓
திரு. எல்.ஜீ. சமரவிக்கிரம	-	-	✓

தலைமை உள்ளக தணிக்கையாளர் தணிக்கைக் குழுவின் அழைப்பாளராகவும், குழுவின் அழைப்பின் பேரில் பொது முகாமையாளர், குறித்த பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் விளக்கமளிக்க கூட்டங்களில் கலந்து கொள்வர்.

குழுவின் கடமைகள்

1. நிதியியல் அறிக்கைகளின் துல்லியம் மற்றும் பகுத்தறிவு பற்றிய பகுப்பாய்வு, கணக்கியல் தரநிலைகளுக்கு ஏற்ப நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுவதை உறுதிசெய்யும்.
2. நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் மதிப்பு, செயல்திறன் மற்றும் செயல்திறனை உறுதி செய்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
3. நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ முறைமையின் பயன்களை மதிப்பாய்வு செய்தல்.
4. வெளியக கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதுடன் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தை மதிப்பாய்வு செய்தல்.
5. சங்கத்தின் நடவடிக்கைகள், விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணக்கத்தை உறுதிப்படுத்தல்.

6. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்/ வெளியக கணக்காய்வு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

7. அரச (பொதுமக்கள்) நிறுவன அபிவிருத்தி பரிந்துறைகள் மற்றும் ஆலோசனைகளை நிறைவேற்றுதல்.

வருடத்தின் நடவடிக்கைகள்

குழுவானது நிதியியல் அறிக்கையிடல் முறைமையை மீள் பார்வை செய்வதானது சம்பந்தப்பட்ட தரப்புகள் துல்லியமானதும் நம்பகத்தன்மையானதுமான தகவல்களை வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன் அதன் அவதானிப்புகள் இலங்கை மற்றும் சர்வதேச கணக்கியல் தரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிசார்ந்த பரிவர்த்தனைகள் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்துகிறது.

உள்ளகக் கணக்காய்வு

நிறுவனமானது மிகச்சிறந்த உள்ளக கணக்காய்வு பிரிவினை கொண்டுள்ளதுடன் அதன் ஊழியர்கள் கணக்காய்வு, நிதியியல் கணக்காய்வு, வரி மற்றும் வர்த்தக நிர்வாகம் போன்றவை உள்ளடங்கலாக பல்வேறு பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுபவம் வாய்ந்த தொழிற்தகைமையாளர்களையும் கொண்டு விளங்குகிறது.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பிரதான நோக்கங்கள்

1. கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்தல்.

2. நிதி மற்றும் செயல்பாட்டுத் தகவலைச் பரிசீலித்தல்.

3. செலவு, செயல்திறன் மற்றும் செயல்பாடுகளின் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல்

4. முகாமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் சிறந்த மதிப்பீட்டுடன் கட்டுப்பாட்டில் உள்ளதை உறுதிப்படுத்துவதுடன் இந்த செயற்பாடுகளும் திட்டங்களும் திட்டமிட்டதற்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதையும் செயற்பாட்டு பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு நோக்கி பயணிப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

5. சட்டங்கள், விதிகள் மற்றும் ஏனைய தேவைகள் முகாமைத்துவ கொள்கைகளுக்கு இணங்க இருப்பதை உறுதிப்படுத்தல்.

6. விசேட விசாரணைகளை நடாத்துதல்.

கணக்காய்வு குழுவானது அறிக்கையிடல் காலத்தில் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளையும் உள்ளக கணக்காய்வு திட்டம், பிராந்திய உர விற்பனையகங்களின் கணக்காய்வு திட்டங்கள், இடர்களை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்காற்று இடர் மதிப்பீட்டு முறைமை மற்றும் கணக்காய்வு திட்டங்களை மையமாகக் கொண்டும் மேற்பார்வை செய்கிறது. இந்த கணக்காய்வு குழுவானது மதிப்பீட்டுக்குரிய ஆண்டில் உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கைகள் மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வாளருடன் கலந்துரையாடுகிறது.

47 பிராந்திய உரக் களஞ்சியசாளைகள் மற்றும் 09 பிரதான பிரிவுகளின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டு ஒட்டுமொத்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு பொறிமுறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்காணிக்கப்பட்டது.

வெளியகக் கணக்காய்வு

கணக்காய்வாளர் நாயக திணைக்களமானது நிறுவனத்தின் வெளியகக் கணக்காய்வாளராக செயற்படுகிறது.

குழுவுக்கு வழங்கப்படும் ஆதரவு

குழுவின் தலைவர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களினால் குழுவிற்கு எதிர்பார்த்த ஆதரவை வழங்கியதோடு, அறிக்கையிடல் காலத்தில் குழு திறம்பட செயல்பட உதவியது. நிறுவனத்தின் முதன்மை உள்ளக தணிக்கையாளர் சம்பந்தப்பட்ட காலாண்டுகளின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க விவசாய அமைச்சினால் நடைபெறும் தணிக்கை மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

குழு மதிப்பீடு

குழுவின் பணி செயற்பாடுகள் பணிப்பாளர்கள் சபையினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன் செயல்முறையானது பயனளித்துள்ளது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருமதி. ஈ.ஜீ.எச்.எம். ரணசிங்க
தலைவி,
கணக்காய்வு குழு,
22 ஜூலை 2021



கொள்முதல் பிரிவின் அறிக்கை

எமது நிறுவனத்தின் பிரதான பணியானது, தேசிய கொள்முதல் வழிகாட்டல்கள் மற்றும் கையேடுகளுக்கு இணங்க நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள், சேவைகள், பணிகள் மற்றும் ஆலோசனை சேவைகளை கொள்முதல் செய்வதாகும். எமது முக்கிய கவனம், விவசாய சமூகத்தின் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு நாட்டிற்கு தேவையான உரங்களினை கொள்வனவு செய்வதாகும். இந்த பணியினை நிறைவேற்றுவதற்காக எமது கொள்முதல் குழு தகுதிவாய்ந்த மற்றும் அனுபவம் கொண்ட 15 அதிகாரிகளை உள்ளடக்கியுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட இரசாயன உர வகைகளின் அளவுகள் பின்வருமாறு:

01/04/2019 to 31/03/2020 வரையிலான உர இறக்குமதிகள்

உர வகைகள்	அளவு (மெ.டொன்)
யூரியா 1	101,160.270
த்ரிபல் சுபர் பொஸ்பேட் (TSP)	32,960.500
முரியேட் பொடேஷ் (MOP)	23,893.778
மொத்தம்	**158,015.048**

திறைசேரிக்குச் சொந்தமான ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து எந்த நிதி உதவியையும் பெறாது. மேலும், இந்நிறுவனத்தின் கொள்முதல் பிவினால் நாட்டின் மொத்த நெல் தேவையில் 60 சதவீதத்தை பூர்த்தி செய்துள்ளது. எனவே, லக்பொஹொர கம்பனியின் இலாபமானது உரங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையின் ஊடாக பரந்த, பன்முகப்படுத்தப்பட்ட சந்தையின் ஊடாக அதிகரிக்கப்படுவதுடன், உற்பத்தி வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் பங்களிக்கிறது. மேலும், இலங்கையில் விவசாயம் மற்றும் கமநல சேவைகள் பிரிவின் ஊடாக இலாபத்தை ஸ்திரப்படுத்துவதில் கொள்முதல் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது.

டொலமைட், உயர்தர எப்பாவாலா ரொக் பொஸ்பேட் மற்றும் எப்பாவாலா ரொக் பொஸ்பேட் போன்ற உள்நாட்டு கொள்முதல் தவிர, நிறுவனம் ஐக்கிய அரபு இராஜ்ஜியம், சீனா, இந்தோனேசியா, பெலரூஸ் குடியரசு, எகிப்து, கட்டார் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து உரங்களை இறக்குமதி செய்கிறது.

மியுரேட் ஒப் பொட்டாஸ் (MOP) மற்றும் ட்ரிபல் சுப்பர் பொஸ்பேட் (TSP) போன்ற பிரதான இரசாயன உர இறக்குமதி தேசிய கொள்முதல் வழிமுறைகள் (NPG) மற்றும் முதன்மைத் தகுதி திட்டத்தின் கீழ் ஆலோசனை கையேட்டிற்கு இணக்கமானதாகும். அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் இரசாயன உரம் கொள்முதல் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், கிஸ்ரிட், சிங்க் சல்பேட், டி-எனேனியம் பொஸ்பேட், பொரேட், ஷல்பேட் ஒப் எமோனியா மற்றும் கொமர்ஷல் எப்சம் போன்ற சிறிய பொருட்கள் இறக்குமதி செய்யும் செயல்முறைகளில் சர்வதேச போட்டியுடனான விலைமனுக்கோரல் நடவடிக்கையை பின்தொடர்வதாகும். அது விவசாய அமைச்சின் செயலாளர் அனுமதிக்கப்பட்ட திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் பரிந்துரைக்கு அமைவாகும். டொலமயிட், உயர் தரத்தினாலான எப்பாவல ரொக் பொஸ்பேட் மற்றும் எப்பாவல ரொக் பொஸ்பேட் உள்நாட்டு கொள்முதல் செய்யும் தேசிய கொள்முதல் வழி பரிந்துரைக்கு இணங்க கொள்முதல் குழுவின் மற்றும் அமைச்சின் அவற்றிற்கு ஏற்ற அனுமதியுடனாகும்.





தகவல் மற்றும் தொழிநுட்ப **பிரிவின் அறிக்கை**

இலங்கை உரக் கம்பனியின் தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு, நிறுவனத்தின் வணிக மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாதுகாப்பான, நம்பகமான மற்றும் இலகுவாக அணுகக்கூடிய தொழிநுட்ப உட்கட்டமைப்பை வழங்குகிறது. மேலும், தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு மென்பொருள், வன்பொருள் மற்றும் வலையமைப்பு செயல்பாடுகளின் பயனுள்ள, திறமையான வடிவமைப்பு, செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு பொறுப்பாகும். அதி நவீன தரவு பாதுகாப்புடன் சரியான நேரத்தில் முகாமைத்துவ தகவலை வழங்கவும், நிறுவனத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது.

மாவட்ட உரக் களஞ்சியம் மற்றும் தலைமை காரியாலயத்திற்கும் இடையே உள்ள வலுவான தொடர்பு காரணமாக நிறுவனத்தின் விரிவான வலையமைப்பு முக்கியமானதாக இருப்பதால், குறைபாடற்ற மற்றும் பதிலளிக்கக்கூடிய அமைப்பை உருவாக்க நிறுவன வள திட்டமிடல் (ERP) அமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை உரக் கம்பனியின் ERP தளத்தின் முக்கிய நோக்கமானது, பொருட்கள் கொள்வனவு முதல் இறுதி விற்பனை விநியோகச் சங்கிலிச் செயற்பாடுகள் வரை, கம்பனியின் பல்வேறு செயற்பாடுகளை இணைப்பதற்கு அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகும். ERP அமைப்பின் ஒருங்கிணைந்த மூலோபாயம் தகவல் பரிமாற்றம் மற்றும் நிறுவன எல்லைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தியுள்ளது.

தற்போது 16 மாவட்ட உரக் களஞ்சியங்கள் தலைமை அலுவலகத்துடன் (ஹூனுபிட்டிய) சம்பந்தப்பட்டுள்ளதுடன், ERP அமைப்பு பதிவுகள் மூலம் தேவையான தரவுகள் வெற்றிகரமாகப் பெறப்படுகின்றன. அது மட்டுமின்றி, கணினி மயமாக்கப்பட்டு அனைத்து DFS வலையமைப்பு வசதிகளை வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.



சட்டப் பிரிவின் அறிக்கை

நிறுவனத்திற்கு எதிராக வெளியாட்களால் தொடரப்பட்ட வழக்குகளுக்கு வெற்றிகரமாகப் பதிலளிப்பதுடன், நிறுவனத்தின் பெருநிறுவன விவகாரங்களில் மிக உயர்ந்த சட்டக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடிந்ததாக சட்டப் பிரிவு பெருமிதம் கொள்கிறது. இந்த முயற்சிகளில், சட்டப் பிரச்சினைகளில் அவர்களின் முன்னோக்கு மாநில சட்டத்துடன் ஒத்துப்போகிறது என்பதை உறுதிப்படுத்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை இப்பிரிவு தொடர்ந்து நாடுகிறது.

மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில், சட்டப் பிரிவின் பணியானது, நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காகக் கணிசமான தொகையைத் திரும்பப் பெறுவதுடன், கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாகும்.

இப்பிரிவு பணியாளர்களின் பிரச்சினைகளை உரையாடல் மூலம் தீர்த்து வைப்பதற்கான பின்னணியை ஏனைய பிரிவுகளுக்கு வழங்கியதுடன், இதன் மூலம் முதலாளி-ஊழியர் ஒற்றுமை உகந்ததாக உத்தரவாதம் அளிக்கப்பட்டதால் தொழிலாளர் பிரச்சனைகளை குறைக்கிறது.

பிரிவு, அதன் அன்றாட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சட்டப்பூர்வ செல்லுபடியை சரிபார்க்க ஒப்பந்தங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களைத் தயாரிக்கிறது.

தொழிநுட்பப் பிரிவின் அறிக்கை

லக்பொஹொர கம்பனியின் தொழிநுட்பப் பிரிவு அனைத்து துறைகளிலும் நிரந்தர ஊழியர்களுக்கு அவர்களின் கூட்டு முயற்சியில் தொழில்நுட்ப சேவைகளை வழங்குகிறது. நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நட்பு மற்றும் வசதியான பணிச்சூழல் இருப்பதை உறுதி செய்வதற்காக நிறுவனம் கொள்முதல் நிலையத்திலிருந்து விநியோக நிலையம் வரை தனது சேவைகளை வழங்குகிறது.

ஏறக்குறைய இருபது நபர்களைக் கொண்ட இந்தப் பிரிவு, நிரந்தரப் பணியாளர்கள், பதிவுசெய்யப்பட்ட களஞ்சியங்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள், பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குபவர்களுக்கு உயர்தர பாரபட்சமற்ற தொழில்நுட்ப சேவைகளை வழங்கி, அதன் சொந்த தரமான சேவைகளை பரந்த அளவில் உருவாக்கியுள்ளது. நிறுவனத்தின் வெற்றிக்கு எப்போதும் பங்களிக்கும் இப்பிரிவு, நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்கள், மற்றும் பணியாளர்களுக்கு நட்புரீதியான பணிச்சூழலை உருவாக்குவதற்கான களத்தை அமைக்கிறது.

தொழில்துறையில், கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட்டம் நிர்ணயித்த நேரத்தை விட குறைவாக வேலை செய்ய மற்ற துறைகளுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டாலும், அவர்கள் அந்த சலுகையால் பயனடையவில்லை என்பதை நாம் பெருமையுடன் கூறுகிறோம். இலங்கையின் தொழிலாளர் விதிமுறைகளுக்கு முழுமையாக இணங்க ஒரு முழு நாளொன்று. இப்பிரிவின் ஊழியர்களின் இந்த எல்லையற்ற, தன்னலமற்ற அர்ப்பணிப்பின் விளைவாக, 2011 முதல் இன்றுவரை எந்தவொரு இடையூறும் இன்றி அதன் ஒவ்வொரு தரமான இலக்குகளையும் அடைய முடிந்தது. சில சலுகைகள் இருந்தபோதிலும் ஏனைய பிரிவுகளுக்கு சேவை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது.

பிரிவினால் வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு.

1. இறக்குமதி செய்யப்பட்ட உரத்தை மத்திய களஞ்சியசாலைகளுக்கு அனுப்புவதற்கு முன்னரும் விநியோகப் பிரிவினால் நாடளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்கு முன்னரும் எடைப் பாலங்களைப் பயன்படுத்தி எடைப்போடுதல்.

2. உரம் திறம்பட சேமிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் அனைத்து ஸ்டெக்கர் இயந்திரங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

3. பை தைக்கும் இயந்திரங்கள், தராசுகள், கை வண்டிகள், சீலர்கள் போன்ற விநியோகப் பிரிவினால் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

4. அனைத்து கட்டப்பட்ட பகுதிகள், கட்டுமான பகுதிகள் மற்றும் நிலத்தின் பராமரிப்பு மற்றும் பராமரிப்பு.

5. நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் உள்ளக தொலைபேசி அமைப்பு ஆகியவற்றின் உகந்த செயல்பாடு.

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, அலுவலக வளாகங்கள் மற்றும் உர விற்பனை நிலையங்களில் உள்ள அனைத்து ஊழியர்களும் தடையின்றி பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக பணியாற்றுவதை உறுதிசெய்ய தொழில்நுட்பக் குழு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தது. கொரோனா நேர்மறை மற்றும் நோயாளிகள் தங்கள் பணியிடத்தில் அறிக்கை செய்வதில் குழுவின் விழிப்புணர்வு பாராட்டத்தக்கது.



ஆய்வுகூட சேவை
பிரிவின் அறிக்கை

லக்பொஹொர ஆய்வுகூடமானது ISO/IEC 17025: 2017 இனால் சான்றளிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை உரச் சபையினால் சான்றளிக்கப்பட்ட உரம் மற்றும் பொதியிடல் பொருட்களைப் பரிசோதிக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது.

ஆய்வுகூடம் வெளியிடப்பட்ட நிலையான நடைமுறைகள், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு ஏற்ப சோதனை சேவைகளை நடத்துகிறது.

உர பரிசோதனை ஆய்வுகூடத்தின் முகாமைத்துவ பணியாளர்களும் வாடிக்கையாளர்களுக்கு சோதனை மற்றும் பகுப்பாய்வுக்காக சிறந்த சேவைகளை வழங்குகிறார்கள், அதே நேரத்தில் அவர்களின் தயாரிப்புகள் இலாபகரமானவை மற்றும் உயர் தரத்துடன் தொடர்புடைய சேவை வசதிகள், தயாரிப்பு தகவல்களை சரியான நேரத்தில் வழங்குவதன் மூலம் உறுதி செய்கின்றன.


ஆய்வுகூடத்தின் நோக்கம் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான கருவிகள் / உபகரணங்கள் மற்றும் முறையான பயிற்சி வழங்கப்படும் சூழலை உருவாக்குவதாகும். அனைத்து ஆய்வுகூட ஊழியர்களும் தங்கள் கடமைகள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் ISO தரநிலைகளை கடைபிடிக்கின்றனர்.

லக்போஹொர நிறுவனத்தின் ஆய்வுகூடம் பாரபட்சமின்றி ஆய்வுகூட நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் அதன் பாரபட்சமற்ற தன்மையைப் பாதுகாக்க நிர்வகிக்கப்படுகிறது. ஆய்வுகூட முகாமைத்துவம் அதன் ஆய்வுகூட நடவடிக்கைகள் / சோதனைகளின் பாரபட்சமற்ற தன்மைக்கு உறுதிபூண்டுள்ளதுடன் வணிக, நிதி அல்லது ஏனைய அழுத்தங்கள் அவற்றின் சோதனைகளின் நேர்மைக்கு இடையூறு விளைவிக்காது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பாகும்.


பரிசோதிக்கப்பட்ட உர மாதிரிகளினுடைய சுருக்க அறிக்கை – ஏப்ரல் – மார்ச் (2019/2020)

அளவு	பரிசோதனைகளின் எண்ணிக்கை													
	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	மொத்தம்	மொத்த செலவு
N	1	7	0	12	4	0	15	2	5	10	0	7	63	132,300.00
Ammo. N	1	2	0	0	0	0	0	0	0	4	0	0	7	14,700.00
P	0	15	1	11	3	1	14	0	3	8	0	6	62	136,400.00
K	4	8	0	11	2	4	12	0	4	11	0	6	62	136,400.00
Na	4	2	0	0	0	4	0	0	2	3	0	0	15	33,000.00
Ca	0	0	0	1	0	0	0	0	2	3	0	0	6	13,200.00
Mg	4	2	0	3	0	4	4	0	3	7	1	2	30	66,000.00
moisture	6	14	2	1	9	5	7	2	1	5	1	1	54	40,500.00
particle	6	14	1	2	3	5	7	2	2	6	1	3	52	31,200.00
HM	30	73	5	10	15	25	30	10	14	34	5	75	326	978,000.00
Water s. P	0	9	1	0	1	1	3	0	0	0	0	0	15	33,000.00
Citric P	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	-
Free acidity	1	2	0	0	0	0	0	0	0	3	0	0	6	6,600.00
Biuret	1	1	0	1	2	0	3	2	3	2	0	1	16	48,000.00
Free Phosphoric Acid	0	9	1	0	1	1	2	0	0	0	0	0	14	29,400.00
Sand content	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	-
pH	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	-
OC	0	0	0	0	0	0	0	0	0	0	0	6	6	19,200.00
s	1	2	0	0	0	0	0	0	0	3	0	0	6	9,000.00
Other	0	0	0	0	0	0	0	0	0	1	0	0	1	1,000.00
மொத்தம்	59	160	11	52	40	50	97	18	39	100	8	107		1,727,900.00

மாதங்களின் அடிப்படையிலான சுருக்க அறிக்கை ஏப்ரல் – மார்ச (2019/2020)



அளவுரு அடிப்படையிலான சுருக்க அறிக்கை ஏப்ரல் – மார்ச் (2019/2020)



பொதி பொருட்கள் மற்றும் காகிதங்களினுடைய பரிசோதனை (2019/2020)

	அளவுருக்கள்	பரிசோதனைகளின் எண்ணிக்கை	செலவு (ரூபா)
பொதிப் பொருட்கள்	பரிமாணம் (அகலம்,நீளம்)	83	62,250.00
	மொத்தவலிமை	4	12,600.00
	நாடாவின் அகலம்	3	3,000.00
	ஒருடி.எம் க்குதையல்	3	2,250.00
	நேரியல் அடர்த்தி	3	3,000.00
	மடிப்புதையல்	3	3,000.00
	கட்டுமானம் (முடிவடைந்த வைமற்றும் எடுத்தவை)	3	2,250.00
	சாக்கின் வாய்	83	41,500.00
	துணி உடைக்கும் வலிமை	3	6,000.00
	வெடிக்கும் வலிமை	1	2,000.00
	உள் லைனர் (அகலம், நீளம், தடிப்பு)	6	7,500.00
தாள்கள்	மாதிரிகள் (ஜிஎஸ்எம்)	111	111,000.00
	மொத்த செலவு		**256,350.00**

ஆய்வுகூட வருமானம் (2019/2020)

வெளிப்புற மாதிரிகள்	Rs. 283,400.00




விநியோகப் பிரிவின் அறிக்கை

தளபாடங்கள் மற்றும் விநியோகப் பிரிவின் செயல்பாடு உரங்களின் சேமிப்பு மற்றும் விநியோகத்தை ஒழுங்கமைப்பதாகும். சரியான தயாரிப்புகள் சரியான நேரத்தில் மற்றும் சரியான விலையில் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை இப்பிரிவானது உறுதி செய்கிறது. போக்குவரத்து, இருப்பு கட்டுப்பாடு, சேமிப்பு மற்றும் உர சுழற்சியை கண்காணித்தல் ஆகியவற்றைக் கையாளுகிறது.

இறக்குமதி செய்யப்படும் உரங்கள் ஹூனுப்பிட்டிய வளாகத்தில் சேமித்து வைக்கப்பட்டு, உள்ளூர் களஞ்சியசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மூலம் திறமையாக விநியோகப் பிரிவின் பிரதான செயல்பாடுகளாகும்.

மேலும், ஆராய்ச்சி நிறுவனங்களால் வழங்கப்படும் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப உரங்களின் கலவை பிரிவின் கடமையாகும். அதன்படி, விநியோகப் பிரிவு நாடளாவிய ரீதியில் 45 களஞ்சியசாலைகளை நிர்வகித்து வருகின்றது. ஒரு களஞ்சியசாலை ஒன்றின் மொத்த கொள்ளளவு 138,000 மெற்றிக் டொன்களாகும்.

மீளாய்வாண்டில், 4387,000 தொன் கலப்பு உரம் உற்பத்தி செய்யப்பட்டதுடன், நெல் விவசாயிகளுக்குத் தேவையான கலப்படமற்ற உரத்தின் மொத்தத் தேவையில் 60% வீதம் அரசாங்க சலுகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.



மேலும், 2019/20 ஆம் ஆண்டில் 4387 டொன் கலப்பு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கலப்பு உரங்களில் அதிக சதவீத உரம் ஏனைய பயிர்களுக்கு (43.45%) உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 32.22% தென்னைக்கும், 20.93% தேயிலைக்கும், 3.4% இறப்பருக்குமாகும்.

சந்தைப்படுத்தல் பிரிவின் அறிக்கை

பின்வரும் நோக்கங்களுக்கிணங்க உகந்த செயல்திறனுக்காக முழு விநியோகச் சங்கிலியையும் நிர்வகிப்பதில் சந்தைப்படுத்தல் பிரிவு பல முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது:

1. அரசாங்க உரக் கொள்கைகளுக்கு இணங்க தரமான உறுதி செய்யப்பட்ட உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் இரசாயன உரத் துறையின் சந்தைத் தலைமையைப் பராமரித்தல், இது லக்பொஹொர நிறுவனத்தின் முக்கிய வணிகப் பகுதியாகும். மேலும் அடுத்த மூன்று ஆண்டுகளை மையமாகக் கொண்டிருப்பதுடன் தற்போதைய சந்தை நிலைமைகளை SWOT மூலம் அடையாளம் காணப்பட்டு பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

உர வகை	2021 யல மெ.டொன்	2021 2022 மஹ மெ.டொன்	* 2022 யல மெ.டொன்	*2022 2023 மஹ மெ.டொன்	*2023 யல மெ.டொன்	*2023 2024 மஹ மெ.டொன்
UREA	59,028	92,325	58,968	92,232	60,060	93,940
TSP	7,589	11,870	7,582	11,858	7,722	12,078
MOP	17,708	27,697	17,690	27,670	18,018	28,182
மொத்தம்	**84,325**	**131,892**	**84,240**	**131,760**	**85,800**	**134,200**

2. அரச கொள்கைகளுக்கு ஏற்ப 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 25% வரை வருடாந்த அதிகரிப்பை அடைய மற்றும் 6% கோட்ட முதலீட்டு ஒதுக்கீட்டில் ஏனைய பயிர்களுக்கு உர சந்தையுடன் மீண்டும் இணைதல்.

உர வகை	2021 2022 மெ.டொன்	2022 2023 மெ.டொன்	2023 2024 மெ.டொன்
நேரடி உரம்	54,000	75,000	86,250
கலவை உரம்	18,000	25,000	28,750
கூட்டு உரம்	-	50	100
மொத்தம்	**72,000**	**100,050**	**115,100**

3. கரிம உரங்களின் விற்பனையில் முறையான அதிகரிப்பு

உலகம் நிலைத்தன்மையை நோக்கி நகரும் போது, விவசாயம் செயல்முறைத் துறைகளில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், நிலையான அபிவிருத்தி இலக்கு எண். 12 (பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி) நிறுவனத்திற்கு முக்கியமானது. மேலும், விவசாய இரசாயனங்களின் நச்சு தன்மை மற்றும் அவை மண்ணுக்கு எவ்வாறு தீங்கு விளைவிக்கின்றன, காற்று மற்றும் தண்ணீரை மாசுபடுத்துகின்றன மற்றும் மனித மற்றும் விலங்குகளின் உடல்நலப் பிரச்சினைகளுக்கு பங்களிக்கின்றன என்பது பற்றிய விரிவான பகுப்பாய்வு உள்ளது. எனவே, நிறுவனம் அதன் ஒட்டுமொத்த சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாகவும், அரசு நிறுவனங்களுக்கு ஏற்பவும் கரிம திரவியத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதனடிப்படையில், இலங்கையில் உள்ள விவசாய சமூகத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் உயர்தர கரிம உரத்தை உறுதி செய்வதற்காக லப்பொஹொர நிறுவனம் உள்நாட்டுச் சந்தையில் கரிம உர உற்பத்தியாளர்களுடன் இணைந்து பணியாற்றும்.

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செயல்திறன்						
மாதம்	Urea	TSP	MOP	Paddy Sales (Mt.)	Other Crop Subsidy Non Subsidy, & Mix Fertilizer Sales (Mt.)	Organic Fertilizer Sales (Mt.)
ஏப்ரல்	6604.350	1470.700	706.550	8781.600	184.638	3.814
மே	25067.600	6453.300	6823.750	38344.650	181.714	24.552
ஜூன்	11654.750	2870.250	4930.600	19455.600	245.985	9.553
ஜூலை	1864.100	424.750	515.450	2804.300	218.508	10.887
ஆகஸ்ட்	603.900	136.900	167.600	908.400	141.451	29.185
செப்டம்பர்	495.000	114.500	112.500	722.000	40.841	10.013
அக்டோபர்	13989.950	4402.250	4510.400	22902.600	110.611	32.002
நவம்பர்	45278.300	8175.050	12623.550	66076.900	77.317	35.553
டிசம்பர்	16940.500	5725.050	4695.100	27360.650	262.090	18.667
ஜனவரி	1456.600	372.450	463.750	2292.800	475.088	26.917
பெப்ரவரி	395.300	86.900	109.900	592.100	128.426	18.062
மார்ச்	965.850	260.200	304.550	1530.600	322.503	9.350
மொத்தம்	**125316.200**	**30492.300**	**35963.700**	**191772.200**	**2389.172**	**228.555**

உர வகை	விற்பனை (மெ.டொன்)	%
நேரடி	1638.345	63
தென்னை	168.323	6
தேயிலை	292.620	11
இறப்பர்	31.225	1
காய்கறிகள்	16.342	1
பழங்கள்	6.196	0.2
பூக்கள்	3.030	0.1
ஏற்றுமதி	37.276	1
ஏனைய உரத் தானியங்கள்	196.025	7
சேதனம்	228.355	9
மொத்தம்	**2617.737**	**100**



நிதியியல் கூற்றுக்கள்

31 மார்ச் 2020 முடிவடைந்த வருடத்திற்கானது
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி





பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 150 (1) மற்றும் 150 உருப்புரைகளுக்கு இணங்க அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக அனைத்து நிதி ஆண்டிற்காகவும் கம்பனியின் நடவடிக்கைகள் மற்றும் கம்பனியின் இலாப நட்ட கணக்கு உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

நிதி நிலையானது நியாயமான மற்றும் சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவும் வகையில் முறையாக பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றமை தொடர்பில், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதெனவும் மற்றும் அக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு விரைவாக மற்றும் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதெனவும் 148 ஆம் உருப்புரையின் பிரகாரம் பணிப்பாள்கள் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களின் நேர்மைத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை தொடர்பான பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் உள்ளடக்கம் முறையாக பிரதிபலிக்கின்ற நியாயமான மற்றும் விவேகமான தீர்மானங்களுக்கு எழுந்து உரிய கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்திற்கு மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு - SLFRS அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமை குறித்தும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

மேலும், நிதிக் கூற்றுக்கள் ஊடாக கம்பனி சட்டத்திற்கு தேவையான தகவல்களும் அளிக்கப்படுகின்றன.

பணிப்பாளர்கள் தமக்குரிய கம்பனி தொடர்பான அறிவு, பிரதான செயற்பாடு மற்றும் கம்பனியின் தொடர்ந்து செல்லும் ஆற்றல் தொடர்பான நிச்சயமான தகவல்களின் அடிப்படையில் அபிப்பிராயத்தினை முன்வைக்கின்றனர். இந்த நிதி கூற்றுக்கள் அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் சொத்துக்கள் பாதுகாப்பு தொடர்பாக பணிப்பாளர்களினால் நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மோசடி அல்லது ஏனைய முறைக்கேடுகள் தவிர்க்கும் நோக்கத்தில் அது தொடர்பாக உரிய உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கம்பனி சட்டத்தின் 57 ஆம் உருப்புரையின் பிரகாரம் அவ்வாறான விநியோகித்தலின் பின்னர் கம்பனிக்கு கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பான பரிசோதனையில் வெற்றிபெற முடியுமென பெறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் திருப்தி அடைந்து, கம்பனி சட்டத்தின் 56 (2) உருப்புரைக்கு அமைவாக தற்போது முன்மொழியப்பட்ட பங்கிலாபம் விநியோகிப்பதற்கு பணிப்பளர் சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன், முன்மொழியப்பட்ட பங்கிலாம் தொடர்பான கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பான கூற்றொன்று கம்பனியின் கணக்காய்வாளர்களிடம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினை கணக்காய்வு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவற்றினை ஸ்தாபிப்பதற்கு கூடுமான வகையில் பொருத்தமானதென கருதும் பரிசோதனைகள் மேற்கொண்டு நிதி கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இணக்க கூற்று

கம்பனியின் ஊழியர்கள் மற்றும் அரசிற்குரிய கம்பனியில் அதன் துணைக் கம்பனிகளிலிருந்து நிதிக் கூற்றுக்களின் திகதியில் செலுத்துவதற்குரிய அனைத்து சட்ட ரீதியான செலுத்தல்களும் உயர்பட்ச அறிவின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளதென அல்லது குறித்த பிரகாரம் அதற்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதென பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

ஜனத் விதானகே
தலைவர்
குழுமம் சார்பாக
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
2020 திசெம்பர் 22 ஆந் திகதி

தலைவர் மற்றும் நிதி முகாமையாளர்களின்
பொறுப்பு அறிக்கை

2010 மார்ச் மாதம் 31 திகதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை உர கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரித்து முன்வைக்கப்பட்டது,

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
- பொது திறைச்சேரியினால் வெளியிடப்பட்டுள்ள கூட்டுறவு கட்டுப்பாடு தொடர்பான சிறந்த நடைமுறைக்கான குறியீடு

நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் உரிய பிரகாரம் மற்றும் எப்போதும் பயன்படுத்தியமையை உறுதி செய்கின்றோம். பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களில் எந்த விலகல்களும் இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு குழு மற்றும் எங்கள் சுயாதீன கணக்காளர்களுடன் உயர் மட்டத்திலான தீர்ப்புக்கள் மற்றும் சிக்கல் தன்மைகள் தொடர்பான குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் கலந்துரையாடப்பட்டது.

உள்ளக கட்டுபாடு மற்றும் கணக்கு அறிக்கை அமைப்பு ஸ்தாபித்தல், சொத்துக்கள் பாதுகாத்தல் மற்றும் மோசடி மற்றும் முறைகேடுகள் தவிர்த்தல் மற்றும் அடையாளப்படுத்துவதற்காகவும் நாங்கள் முறையான மற்றும் போதுமான கவனம் எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து செல்லும் அடிப்படை மீது மதிப்பாயப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு, நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. கம்பனியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டுள்ளமைக்கு சாதாரண உறுதிப்படுத்தல்கள் கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்களினால் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் ஊடாக வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்கு அமைப்பின் ஊடாக வழங்கப்படுகின்ற சான்றுகள் பெற்றுக் கொள்ளும் போது அடையாளப்படுத்தப்பட வேண்டிய இயல்பான வரம்புகள் காணப்படுகின்றன.

கணக்காய்வின் பயனுறுதியினை மீளாய்வு செய்வதற்கு, கணக்காய்வு செய்வதற்கு, உள்ளக கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடலின் பிரச்சனை தொடர்பாக கம்பனியின் கணக்காய்வு குழுவானது அவ்வப்போது உள்ளக கணக்காய்வாளர்களுடன் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடுவதற்கான பூரண சுதந்திரம் காணப்படுகின்றது. சுயாதீன கணக்காய்வாளர்களுக்கு மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு ஏதேனும் விடயம் தொடர்பாக கணக்காய்வு குழு கூட்டங்களின் போது கலந்துரையாடுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

ஜனித் விதானகே
தலைவர்

கயானி தர்மிலா
நிதி முகாமையாளர்
2021 ஜூலை 22 ஆந் திகதி

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. AGL/C/CFC/2021/01 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 12 October 2021

தலைவர்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2020 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் ("கம்பனி") 2020 மார்ச் 31 இல் உள்வாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உறுப்புரைக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனியினால் நேரடியாக கொள்வனவு செய்யப்படுகின்ற உர வகைகள் கம்பனியினுள்ளேயே சந்தைப்படுத்தல், கலத்தல், சிறிய பொதிகளாக தயாரித்தல், மீண்டும் பொதி செய்தல், ஒவ்வொரு வகைகளிடையில் மாற்றப்படல் போன்ற வெவ்வேறு செயன்முறைகளுக்கு உட்படுகின்றது. கணக்காண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நேரடி உரம் தொடர்பாக மேற்படி வெவ்வேறு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் எண்ணிக்கை உட்படுத்தப்பட்டு இறுதி இருப்பு கணக்கிடப்பட்டிருப்பினும், இருப்பு கணக்கிடப்படும் போது அடையாளப்படுத்தியுள்ள

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 agf@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

101.17 மெட்ரிக் டொன் ஆன உர இருப்பு பற்றாக்குறை, விற்பனை கிரயத்திற்கு சீராக்கப்பட்டிராமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அண்ணளவாக ரூபா 5,085,500 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கம்பனியின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து பொருட்களும் நுகர்வுப் பொருட்கள் கணக்கொன்றிற்கு கணக்கிடப்பட்டு களஞ்சியத்திற்கு கையளிக்கப்படுவதுடன் களஞ்சியசாலையிலிருந்து தொடர்புடைய பிரிவிற்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பொருட்கள், சொத்துக்கள் அல்லது செலவினமாக அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படும் முறை பயன்படுத்தப்படும். கணக்கு ஆண்டினுள் நுகர்வு பொருட்கள் கணக்கில் ரூபா 1,978,401 ஆன பற்றாக்குறை உருவாகியுள்ளதுடன் பற்றாக்குறை தொடர்பான விசாரனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பதிலாக பற்றாக்குறையின் பெறுமதி சொத்து மற்றும் செலவின கணக்குகளுக்கு சீராக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை உரக் கம்பனியின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள வத்தலை, ஹரீனுபிடிய காணி கம்பனிக்கு சட்ட ரீதியாக கையகப்படுத்தப்படாது ரூபா 1,868,965,707 ஆன பெறுமதிக்கு மீள் மதிப்பிடப்பட்டு நடைமுறையல்லாச் சொத்தாக நிதிக் கூற்றுக்களினுள் உட்படுத்தப்படல் காரணத்தினால் நடைமுறை அல்லாச் சொத்து அப் பெறுமதியினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொழும்பு கட்டுநாயக நெடுஞ்சாலைக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக கையகப்படுத்தப்பட்ட களனி பிரதேச செயலாளர் கீழ் காணப்படுகின்ற 28 பர்சஸ் இனாலான அரச காணி தொடர்பில் கம்பனிக்கு சட்டரீதியான உரித்து காணப்படாதெனினும் காணித் துண்டுக்காக ரூபா 12,600,000 ஆன பெறப்பட வேண்டிய இழப்பீடு கணக்கிடப்பட்டமையின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களினுள் நடைமுறை சொத்து அப் பெறுமதியினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கம்பனியின் உர வழங்குநர்களுக்காக குறித்த வண்ணம் கொடுப்பனவு செய்வதற்கு திறைச்சேரியிடமிருந்து கட்டுநிதி பெறப்படாமை காரணத்தினால் வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட குறுகிய கால கடன் பணத்தின் ஊடாக கொடுப்பனவு தீர்க்கப்பட்டிருந்தது. பின்னர் குறுகிய கால கடன் பணம் பொது திறைச்சேரியின் பொறுப்பின் கீழான கடனுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் குறுகிய கால கடனுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட கடன் வட்டி அறவிடல் தொடர்பாக பொது திறைச்சேரியுடன் இணக்கப்பாட்டிற்கு வராமை மற்றும் குறுகிய கால வட்டி நீண்ட கால கடன் பணத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் திறைச்சேரியின் பொறுப்பினை உறுதி செய்யாத ரூபா 268,732,450 ஆன குறுகிய கால வட்டி பொது திறைச்சேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியாக கணக்கிடக்கட்டிருந்தது.

(ஊ) உர ஏற்றுமதியின் போது இரு தரப்பினர் இணங்கிய அளவினை விட குறைந்த அளவு வழங்குனர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றின் போது வழங்குனரின் இன்வொயிஸ் பெறுமதியில் குறித்த குறைவான உர இருப்பின் பெறுமதி குறைக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் வழங்குனரின் இன்வொயிஸ் பெறுமதி கொள்வனவாகவும் குறைவாக அனுப்பப்பட்டிருந்த இருப்பின் பெறுமதி பெறப்பட்ட வேண்டிய மீதியாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆண்டினுள் இன்வொயிஸ் செய்யப்பட்ட இருப்பு பெறுமதியினை விட குறைவாக இருப்பு பெறுவனவுகளாக ரூபா 16,861,511 ஆன தொகை பெறப்பட வேண்டிய மீதியாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஆண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய மீதி ரூபா 6,398,762 ஆக காணப்பட்டது. மேற்படி பெற வேண்டிய மீதி குறித்த வழங்குனருக்கு செலுத்தப்பட வேண்டிய மீதிக்கு சீராக்கப்பட்டு கணக்கிடப்படாமையின் காரணத்தினால் குறுகிய வங்கி கடன் பெற்றுக் கொள்ளல் ஊடாக மேற்படி மீதியும் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு மீண்டும் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதற்கு ஏற்பட்டமையினால் மேலதிக வட்டி செலவினமொன்று ஏற்பதற்கு ஏற்பட்டுள்ளதுடன் போலி பெற வேண்டிய மீதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) காசுப் புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்ற ஒவ்வொரு கொடுக்கல்வாங்கள் தொடர்புடைய திகதியில் பேரேட்டில் பிரதி செய்தலுக்கு பதிலாக மாதமொன்றின் கொடுக்கல்வாங்கல்களின் கூட்டுத்தொகை பேரேட்டில் கணக்கிடல் மற்றும் பல கொடுக்கல்வாங்கல்களின் கூட்டுத்தொகைக்காக நாளேட்டு வவுசர் தயாரிக்கப்பட்டிருந்தமை காரணத்தினால் கொடுக்கல்வாங்கல்கள் நாள்தோறும் இணக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஏ) முறையாக ரூபா 72,102,543 ஆன வியாபார கடன் பட்டோர், ரூபா 4,636,187,820 ஆன வியாபார கடன் கொடுநர்கள் மற்றும் ரூபா 59,421,950 ஆன நானாவித கடன் கொடுநர்களுக்கு தொடர்புடைய மீதி உறுப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

முகாமையானது இலங்கை கணக்காய்வு தரத்திற்கு இணங்க நிதிநிலைமைக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என சபை நிர்ணயிக்கின்ற உள்ளக கட்டுப்பாடுகளுக்கு இது பொறுப்பாக உள்ளது.

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வுநடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2)(ஈ) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(கை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ச)(ஈ)(�ை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து, ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமை.

சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ) 2003 யூன் 02 திகதிய PED/12 ஆம் ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிக்காட்டி கோவையின் 8.3.3 ஆம் பந்தி	பொது திறைச்சேரியிடமிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு முறையில் மற்றும் தேசிய சம்பள மற்றும் கொடுப்பனவு கொள்கைகைகள் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் மொத்த பெறுமதி ரூபா 49,940,295 ஊக்குவிப்பாக ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.
(ஆ)2003 யூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிக்காட்டி கோவையின் 5.1 ஆம் பந்தி	கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் அனைத்து அரச கம்பனிகளும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் நிதி ஆண்டு நிறைவடைந்து 210 நாட்கள் கடந்த பின்னர் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.
(இ) 2015 மே 25 திகதிய PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 திகதிய PED/1/2015 (i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு	போக்குவரத்து வசதி உரித்து அற்ற முகாமையாளருக்கு (பெறுகை மற்றும் இறக்குமதி) வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்படாது 120 லீட்டர் எரிப்பொருளுக்காக ரூபா 11,400 ஆன எரிப்பொருள் கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி சுற்றறிக்கை ஊடாக உள்ளடக்கப்படாத மத்திய மட்டத்திலான 09 முகாமையாளர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாட்டினை விஞ்சி ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 வீதமாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 1,160,000 ஆன எரிபொருள் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என

(அ) உர வழங்குனர்களுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒப்பந்தம் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பிற்காக கொள்களன் பிரிவு வரை தொடர்புபடுகின்ற அனைத்து கிரயமும் வழங்குனர் முன்வைக்கப்பட்ட விலையில் உள்ளடங்கியமையின் காரணத்தினால் கோவைக் கட்டணம், கொள்களன் கழுவல் கட்டணம், வட்வரி மற்றும் முத்திரைக் கட்டணம் வழங்குனரின் தேசிய பிரதிநிதியினால் ஏற்கப்படல் வேண்டும். எனினும் வழங்குனரின் பொறுப்பொன்றாகிய மேற்படி பணிகள் கடற்படை முகவர் நிறுவனமொன்றிற்கு கையளித்தல் காரணத்தினால் கடந்த 2 ஆண்டுகளினுள் மொத்த பெறுமதி ரூபா 4,222,578 ஆன தொடர்புபடாத செலவிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2020/2021 பெரிய பருவத்தினுள் நெல்லுக்காக பகிர்விற்காக மானிய உரம் போதுமானதாக காணப்படாமை காரணத்தினால் அக் குறைப்பாட்டினை தவிர்த்துக் கொள்வதற்கு வேறு பயிர்செய்கைக்காக உரம் வழங்கும்

வழங்குனர்களிடமிருந்து கடன் அடிப்படையில் 3,500 மெட்ரிக் டொன் யூரியா பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி உர இருப்பு இலங்கை உரக் கம்பனி பெயரில் மற்றும் அரசிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மானிய உரமாக பெயரிடப்படாது கம்பனியின் பொதியியலுடன் கமநல சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அரசின் மானிய உரத்தினை முறைக்கேடாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய மற்றும் சர்வதேச வழங்குனர் நிறுவனமொன்று மற்றும் இலங்கை உரக் கம்பனி இடையில் திரவ உரம் வழங்கலுக்கு பதிலாக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக அன்றி சர்வதேச வழங்குனர் கம்பனிக்கு வங்கி பற்று பெறுவதற்காக 2018 ஆம் ஆண்டில் இலங்கை உரக் கம்பனிக்குரிய ரூபா 94,438,766 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் வங்கி பிணையாக பயன்படுத்தப்படுவதற்கு இடமளித்திருந்தது. இந்த பிணை பயன்பாட்டில் வெளிநாட்டு வழங்குனர் கம்பனி 2019 பெப்ரவரி 12 ஆம் திகதியளவில் ரூபா 75,980,000 ஆன வங்கி பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் திகதிக்கு சேர்ந்த வட்டியுடன் செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 80,502,290 ஆக காணப்பட்டது. வெளிநாட்டு வழங்குனர் கம்பனி மேற்படி வங்கி பற்றினை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணத்தினால் கம்பனி பிணையாக வைக்கப்பட்டிருந்த இரு நிலையான வைப்புக்களிலிருந்து நிலுவைக் கடன் மீதி தீர்ப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த முறையற்ற சட்ட ரீதியற்ற கொடுக்கல்வாங்கலின் காரணத்தினால் ரூபா 17 மில்லியனான இழக்கப்பட்ட வட்டி வருமானத்துடன் இலங்கை உரக் கம்பனிக்கு உருவாகியுள்ள நட்டம் ரூபா 97.5 மில்லியன் ஆக காணப்பட்டது.

(ஈ) இலங்கை உரக் கம்பனி மற்றும் வெளிநாட்டு வழங்குனர் கம்பனி இடையில் 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பிரகாரம் வழங்கப்பட்ட திரவ உரங்களில் 2021 மார்ச் அளவில் ரூபா 79,716,652 பெறுமதியான காலாவதியான உரம் 109,408 லீட்டர் அளவு ஹூனுபிடிய களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(உ) கம்பனி கிரயம் குறைந்த விநியோக முறையொன்றினை ஸ்தாபிக்கப்படாது மற்றும் களஞ்சிய தேவை அடையாளப்படுத்தப்படாது நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் 46 களஞ்சியசாலைகள் நடாத்திச் செல்லப்படுவதற்காக மற்றும் அதன் ஊடாக சம்பளம், நீர்வாகம், செயற்பாடு மற்றும் போக்குவரத்து செலவினம் தேவையற்றதாக உயர்த்தல் காரணத்தினால் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான உர விநியோகத்தின் ஊடாக தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டம் பெற்றிருந்தது.

(ஊ) மானிய உர இருப்பு முறையான முகாமைத்துவத்துடன் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் கடந்த கணக்கு ஆண்டினுள் ரூபா 40,288,200 பெறுமதியான 671.47 மெட்ரிக் டொன் உரம் மற்றும் கணக்காண்டினுள் ரூபா 13,526,400 பெறுமதியான 225.44 மெட்ரிக் டொன் மானிய உரம் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு முடியாதவாறு சேதத்திற்கு உட்பட்டிருந்தமை காரணத்தினால் அரசிற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 53,814,600 ஆக காணப்பட்டது.

(எ) ஆண்டு இலாபம் மற்றும் கப்பல் தடைநீக்க வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு 2020 மார்ச் மாதம் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கை படி மீது 03 மாத ஊக்குவிப்பு கொடுப்பனவொன்று செலுத்துவதற்காக முறையாக 2020 மார்ச் 20 ஆம் திகதி மற்றும் 2020 செப்தெம்பர் 25 ஆம் திகதிகளில் 02 அமைச்சரவை பத்திரங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இரு சந்தர்ப்பங்களிலேயும் கப்பல் தடைநீக்க வருமானத்தில்

60% இனை விஞ்சாத வண்ணம் வருடாந்த ஊக்குவிப்பு செலுத்துமாறு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதற்கு அமையாதவாறு கப்பல் தடைநீக்க வருமானம் கருத்திற் கொள்ளப்படாது 2020 மார்ச் மாதம் செலுத்தப்பட்டிருந்த அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்ககைப் படி கொடுப்பனவை அடிப்படையாகக் கொண்டு 03 மாதங்களுக்கான சம்பளமொன்று ஊக்குவிப்பு கொடுபனவாக செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த உயர்ந்தபட்ச ஊக்குவிப்பு அளவு (கப்பல் தடைநீக்க கட்டணம்*60%= ரூபா. 44,407,138*60%) ரூபா 26,644,282 ஆகும். எனினும் பணிப்பாளர் சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் அமையாதவாறு மொத்த பெறுமதி ரூபா 49,940,295 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தல் காரணத்தினால் ரூபா 23,296,013 ஆன தொகையொன்று அங்கீகாரமின்றி ஊக்குவிப்பு கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைமை மாற்றப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் போது காண்பிக்கப்படுகின்ற திறமைக்காக அங்கீகரிக்கப்பட்ட புள்ளி அளவு 25 புள்ளி தொடக்கம் 60 புள்ளி வரை அதிகரித்து பதவிகளுக்காக மிக முக்கியமான கள அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 30 புள்ளியானது, 05 புள்ளி வரையில் குறைத்து நேர்முகப் பரீட்சைக்காக தகுதி பெற்றிருந்த திறமை மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மிக நியாயமற்றவாறு குறைந்த திறன் மற்றும் அனுபவமுள்ள விண்ணபதாரிகளுக்கு தனிப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 28 நபர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) களஞ்சியசாலை ஊழியர்களுக்காக ரூபா 10,530 மற்றும் அலுவலக ஊழியர்களுக்காக ரூபா 7,938 ஆக மொத்த பெறுமதி ரூபா 4,813,131 ஆன தொகை வருடாந்த ஆடை கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருப்பினும் இதற்காக அடிப்படையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அரச நிறுவனத்திற்காக புதிய வாகனங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான 07.:2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைக்கு எல்லைக்குட்பட்டு, காணப்படுகின்ற வாகனங்கள் மேம்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டுமென அரச கொள்கை வெளியீட்டின் பிண்ணனியில் 10 ஆண்டுகளுக்கு அதிகமான வாகனங்கள் அகற்றப்பட்டு குத்தகை அடிப்படையில் வாகனங்கள் கொள்வனவு செய்தல் பொறுத்தமானது என 2021 சனவரி 26 திகதிய அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மாணிக்கப்பட்டிருந்தது. அகற்றலுக்கு முன்மொழியப்பட்ட வாகனங்கள் தொடர்பாக கடந்த 03 ஆண்டு காலத்தினுள் அசாதாரனமான மேம்பாடு செலவினம் ஏற்கப்பட்டிராததுடன் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விசேட மேம்பாடு நிலைகள் அவதானிக்கப்படவில்லை. ஓட்ட குறிப்பின் பிரகாரம் கடமை இடையூறின்றி ஓடும் அடிப்படை யாதார்த்மான விடயத்திற்குரிய வாகனங்கள் யாதார்த்மான தெளிவான தேவையின்றி அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்டுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக கம்பனியின் பொது அறிவித்தல் பிரசுரிக்கும் முறை மாற்றப்பட்டு தலைவரின் கோரிக்கைக்கமைய பெறுகை செயன்முறையன்று தனியார் விளம்பர நிறுவனமொன்றின் ஊடாக பத்திரிக்கை அறிவித்தல் பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை காரணத்தினால் கடந்த காலத்தில் லேக்ஹவுஸ் நிறுவனமிடமிருந்து அறிவித்தல் பிரசுரிப்பதற்கு ஏற்கப்பட்ட செலவினத்தினை பார்க்கிலும் இரு மடங்கினை விட அதிக செலவொன்று ஏற்பதற்கு கம்பனிக்கு நேர்ந்தது. கணக்காண்டினுள்

பொது அறிவித்தல்களுக்காக மேற்படி தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 2,243,376 ஆக காணப்பட்டது.

(ஒள) கம்பனியின் முகாமைத்துவம் கணக்காண்டினுள் செயற் மூலதனம் என்று முகாமைத்துவம் செய்வதற்கு தோல்வியடைந்தமை காரணத்தினால் ரூபா 66,858,564 ஆன வங்கி பற்றொன்றிற்காக ரூபா 572,290 ஆன தவிர்த்துக் கொள்ள இயலுமாகவிருந்த கடன் வட்டி செலவினம் ஏற்பதற்கு நேர்ந்திருந்தது.

(க) மானிய முறையினுள் நெல் பயிற்செய்கைக்காக தேசிய உர செயலாளர் அலுவலகம் அங்கீகரிக்கப்பட்ட கமநல சேவைகள் மத்திய நிலையங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அளவில் உரம் பெற்றுக் கொடுத்தல் தவிர உர சந்தைப்படுத்தல் மேம்பாட்டினுள் வருமானம் அதிகரித்துக் கொள்வதற்கு நிகழ்கால உர விநியோக முறையினுள் கம்பனிக்கு இடமற்ற நிலையில் இலங்கை உர பெயரில் 1,000 பெரிய, சிறிய கூடைகள் அச்சிடுவதற்காக ரூபா 470,000 ஆன சிக்கனமற்ற செலவினம் மேற்கொண்டிருந்தது. விநியோக மேம்பாட்டிற்காக அச்சிடப்பட்டுள்ள இந்த கூடை இருப்பில் பகுதியொன்று கம்பனியின் ஊழியர்களுக்கு இலகுவாக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 455 கூடைகள் 16 மாதங்களாக நுகர்வு பொருட்கள் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(ங) கணக்கு ஆண்டினுள் இறக்குமதி செய்யப்பட்ட 04 கடன்பத்திரங்களுக்கு தொடர்புடைய 11,024.25 மெட்ரிக் டொன் TSP (ஆய்வுக் கூட அறிக்கைகள் தோல்வி காரணத்தினால்) விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஆய்வுக் கூட அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் அங்கீகாரமின்றி கம்பனியினால் மேற்படி உர இருப்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இலங்கை உர கம்பனியினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மேற்படி தரத்தினாலற்ற உர இருப்பிற்காக உர மானிய பணம் செலுத்துவதற்கு தேசிய உர அலுவலக செயலக அலுவலகம் பரிந்துரை செய்யப்படாதிருப்பினும் உரத்திற்காக செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு குறுகிய கால வங்கி கடனொன்று ஊடாக கொடுப்பனவு தீர்க்கப்பட்டு பின்னர் பொது திறைச்சேரியின் பொறுப்புடன் நீண்ட கால கடன் பணத்திற்கு மாற்றப்பட்டு முறையான அங்கீகாரமின்றி மானிய பணம் பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

(ச) இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பு தொடர்பாக பெறப்பட்ட ஆய்வுக்கூட பரிசோதனை அறிக்கை தோல்லி கண்டமை காரணத்தினால் உரமானது, 02 உர இறக்குமதி கம்பனிகளுக்கு தொடர்புடைய மொத்த பெறுமதி 589,587.5 ஐ.அ.டொலர்களான 03 செயலாற்றல் பிணைகள் அறவிடப்படுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்கு எதிராக வழங்குனர்கள் நடுவரை நாடியிருந்ததுடன் நடுவர் மன்றத்தில் குறித்த கம்பனி ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராதமை உறுதி செய்யப்பட்டு தரத்திற்கு அமைவாக உர வழங்கல் ஊடாக ஏற்பட்ட நட்டம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு செயற்படாது கம்பனியினால் தீர்வு கண்டு அறவிடப்பட்ட செயலாற்றல் பிணை மீள செலுத்தப்பட்டிருந்தது. இது சர்ச்சை தன்மையிலான விடயமாக அவதானிக்கப்படுகின்றது.

(ஞ) கம்பனிக்கு சொந்தமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையில் (Sri Lanka Accreditation Board) பதிவு செய்யப்பட்ட ரூபா 19,130,944 பெறுமதியான ஆய்வுக்கூட உபகரணங்களை கொண்ட ஆய்வுக் கூடமொன்று காணப்படினும், மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவு பரிசோதனைகள் 69 ஆக காணப்பட்டதுடன் ஆண்டினுள் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா 278,730 ஆகும்.

இந்த ஆய்வுக் கூடத்தில் வருமானமொன்று ஈட்டுவதற்கு முடிந்த வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனால் ஆய்வுக் கூடத்திற்கு சொந்தமான வளங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ட) இரசாயன உர பயன்பாடு குறைக்கப்பட்டு கரிம உர பயன்பாட்டினை பிரபலப்படுத்துவதற்காக கண்டி, நுவரஎலிய மாவட்டங்களில் இரசாயன உர ஏற்பாடு 25% இனால் குறைத்து கரிம மற்றும் கலவை உரம் பெற்றுக் கொடுப்பதற்கு தேசிய உர செயலாளர் அலுவலகம் ஊடாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதற்கமைவாக கரிம உரம் மற்றும் கலவை உர உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காக கம்பனி முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ண) நிறுவன வள திட்டமிடல் முறைமையொன்று (ERP System) ஸ்தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்கு ஆண்டு வரை மொத்த பெறுமதி ரூபா 38,176,014 ஆன கிரயமொன்று ஏற்றிருப்பினும் மேற்படி முறைமை ஒட்டுமொத்த இறக்குமதியையும் மற்றும் நிறுவப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற முறைமைகளும் வலுவான கட்டுப்பாடுகள் அன்றி செயற்படுத்தப்படல் காரணத்தினால் ஏற்கப்பட்ட் நிறுவல் கிரயம் அண்ணளவாக ரூபா 1,580,000 ஆன நிறுவப்பட்ட நிறுவகத்திற்கு செலுத்தப்படுகின்ற வருடாந்த பராமரிப்பு செலவில் எதிர்பார்க்கப்பட்ட விளைவு பெற்றுக் கொள்வதற்கு கம்பனி தோல்வி கண்டிருந்தது.

(த) 2019/MOA/CRC/UR(G)/04/01 ஆம் கணக்கு இலக்க மற்றும் 814 ஆம் கொள்முதல் ஆணையின் கீழ் MV Alby Meloty கப்பலிலிருந்து 14250 மெட்ரிக் டொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. கப்பலிலிருந்து உர இருப்பு இறக்கும் சந்தர்ப்பத்தில் கப்பலினுள் உரம் கட்டியாகியிருத்தல், நிறமங்கியிருத்தல் காரணத்தினால் வழங்குனரின் தேசிய பிரதிநிதியுடனான உடன்பாட்டுடன் களனி பெதியாகொடை பிரதேசத்தில் களஞ்சியசாலையொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டு இரு தரப்பினதும் இணக்கத்துடன் நியமிக்கப்பட்ட பரிசோதனை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஹுனுபிடிய இலங்கை உர கம்பனியில் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பினர் இடையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உரம் பெறப்படாத சந்தர்ப்பத்தில் உர இருப்பினை நிராகரிக்கும் திறன் காணப்படுகையிலும் அவ்வாறு செய்வது மேற்படி கொடுக்கல்வாங்கல் தொடர்பாக தேசிய உர செயலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்காமை, கட்டியாகி, நிறமங்கியிருந்த உர இருப்பு தொடர்பில் தேசிய உர செயலாளர் அலுவலகம் ஊடாக ஆய்வுக் கூட பரிசோதனை மேற்கொள்ளமை மற்றும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பரிசோதனைக்காக தேசிய உர செயலாளர் அலுவலத்தின் பிரதிநிதியொருவர் உள்ளடக்கப்பட்டிராமை காரணத்தினால், உர இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய முறைமைகள் கருத்திற் கொள்ளப்படாது கம்பனியின் முகாமைத்துவம் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3. ஏனைய விடயங்கள்

(அ) மானிய உரம் பெற்றுக் கொடுக்கும் முறைமை செயற்படும் திகதியிலிருந்து நெற் பயிர்செய்கைக்காக உரம் வழங்கும் அரசின் பிரதிநிதியாக இலங்கை உரக் கம்பனி செயற்படுகின்துடன் அத் திகதியிலிருந்து விற்பனை மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான ஏனைய விடயங்கள் பாரியளவில் குறைந்துள்ளது. தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அலோசனையின் அடிப்படையில் பிரதேச உர களஞ்சியசாலை ஊடாக உரம் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றதுடன் துறையினுள் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தல்

அல்லது சந்தைப்படுத்தல் மேற்பார்வை போன்ற நடவடிக்கைகளினுள் உள்ளடக்கப்படாது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை திருத்துவதற்கு பதிலாக கம்பனி அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பதவியணிக்குரிய மாவட்ட சந்தைப்படுத்தல் மேம்பாடுகள், பிரதேச சந்தைப்படுத்தல் மேம்பாடுகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்கு தொடர்ச்சியாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிலும் 3 பிரதேச சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பதவிகளுக்காக கடமை நிறைவேற்றல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் கம்பனிக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவிற்காக விளைவற்ற கிரயமொன்றினை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளுக்காக ஊழிய ஆட்சேர்ப்பின்றி 06 மாதங்களுக்கு ஒரு தடவை கடமையில் மீள அமர்த்தல் அடிப்படையில் 12 நாட் பணிளாளர்களின் சேவை பெறப்பட்டு அதற்காக ரூபா 1,362,691 செலுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 4 உள்ளிருப்பு பயிற்சியாளர்கள் ஆட் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 2,74,850 ஆன சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக தேவைப்படுகின்ற பயிற்சி தேவைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவு தொடர்பில் மதிப்பொன்றின் ஊடாக தயாரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி திட்டமின்றி மீளாய்வாண்டினுள் வேலைத்திட்டங்கள் மற்றும் பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்கு பெற வைப்பதற்காக ரூபா 1,671,730 ஆன கிரயமொன்று ஏற்கப்பட்டிருந்தது.

(ஈ) உரம் பெறல், வழங்குதல், மாற்றல் உள்ளடங்கலாக உரம் தொடர்பான முழுமையான செயற்பாடு கணனிமயப்படுத்தப்பட்டிருப்பினும் கணினி அமைப்பிற்கு முன் திகதிக்கு நாளதுவரையாக்கப்படும் விதத்தில் தரவுகள் உள்ளடக்கும் திறன் காணப்படுகின்றமை, தேவையான பொது கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்பு கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமை காரணத்தினால் இருப்பு கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய கணினி அமைப்பு தொடர்பாக கணக்காய்வினால் திருப்தியடைய முடியவில்லை.

டப்.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

	குறிப்பு	2020	2019
வருமானம்	3	2,100,583,296	1,869,949,695
விற்பனைக் கிரயம்	4	(1,832,856,472)	(1,680,578,537)
மொத்த வருமானம்		**267,726,824**	**189,371,158**
பிற தொழிற்பாட்டு வருமானம்	5	209,623,485	107,856,870
நிர்வாகச் செலவுகள்	6	(550,184,970)	(536,274,315)
விநியோகச் செலவுகள்	7	(21,423,709)	(42,014,342)
தொழிற்பாடுகளிலிருந்தான இலாபம்		**(94,258,371)**	**(281,060,628)**
நிதி வருமானம்	8	345,946,426	433,720,019
நிதிக் கிரயம்	8	(63,244,126)	(32,877,346)
வரிக்கு முன்னர் இலாபம்		**188,443,929**	**119,782,045**
வருமானவரி செலவுகள்	9	(90,450,653)	(154,288,123)
ஆண்டிற்கான இலாபம்		**97,993,276**	**(34,506,078)**
ஏனைய விரிவான வருமானம்			
கடப்பாடு மீதான உள்ளவாரான இலாபம்/ நட்டம்		(10,206,319)	(6,132,395)
மீள் மதிப்பீடு மிகை மீதான பிற்போடப்பட்ட நலன்கள்/(செலவுகள்)		5,493,967	113,390,169
மொத்த ஏனைய விரிவான வருமானம்		**(4,712,352)**	**107,257,774**
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்		**93,280,924**	**72,751,696**
ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் (EPS)	10.1	1.95	(0.69)
ஒரு பங்கிற்கான ஈவுத் தொகை (DPS)	10.2	0.59	(0.21)

அடைப்புக் குறிக்குள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.

பக்கம் 5 தொடக்கம் 24 வரையுள்ள நிதி அறிக்கைக்களுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நிதி நிலைமைக் கூற்று

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

	குறிப்பு	2020	2019
சொத்துக்கள்			
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதனம், பொறி உபகரணம்	11	2,705,686,663	2,744,935,187
மூலதன நடைமுறை வேலைகள்	12	676,729	676,729
அசையாச் சொத்துக்கள்	13	13,754,126	17,501,026
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**2,720,117,519**	**2,763,112,942**
நடைமுறைச் சொத்துக்கள்			
தொக்குகள்	14	225,993,757	646,533,328
வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள்	15	18,802,655,103	19,388,003,091
ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்கள்	16	40,730,642	37,891,499
முதிர்விற்கான முதலீடுகள் (எச்டீஎம்)	17	698,334,484	634,370,554
ஏனைய நிதிச் சொத்துக்கள்	18	2,267,056,772	3,437,106,212
நடைமுறை வரிச் சொத்துக்கள்		41,815,680	23,998,980
காசும் காசுக்கு சமனானவைகளும்	19	570,071,557	151,964,476
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**22,646,657,994**	**24,319,868,140**
மொத்த சொத்துக்கள்		**25,366,775,513**	**27,082,981,082**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
உரிமையாண்மை			
கூறப்பட்ட மூலதனம்	20	502,456,080	502,456,080
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	21	2,297,282,725	2,291,788,758
நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய்		3,341,503,885	2,736,939,175
மொத்த உரிமையாண்மை		**6,141,242,690**	**5,531,184,013**
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
ஓய்வூதிய நலன் கடப்பாடு	22	68,393,216	59,861,488
பிற்போடப்பட்ட விரிவிதிப்பு	23	169,037,795	643,022,709
வட்டி தாங்கு கடன்கள்	25	-	5,650,658,426
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		**237,431,011**	**6,353,542,623**
நடைமுறைச் சொத்துக்கள்			
வியாபார மற்றும் எனைய செலுத்த வேண்டியவைகள்	24	4,694,602,515	5,685,527,349
வட்டி தாங்கு கடன்கள்	25	14,103,482,956	9,144,554,912
வைப்புக்கள் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள்	26	44,458,457	148,972,883
திரட்டப்பட்ட செலவுகள் மற்றும் ஒதுக்கங்கள்	28	78,699,320	108,446,379
வங்கி மேலதிக பற்றுக்கள்	19	66,858,564	110,752,922
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**18,988,101,812**	**15,198,254,446**
மொத்த உரிமையாண்மையும் பொற்புக்களும்		**25,366,775,513**	**27,082,981,082**
பங்கிற்கான நிகர சொத்து பெறுமதி		**122.22**	**110.08**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என நான் இத்தாள் சான்றுப்படுத்துகின்றேன்.

நிதி முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தாயரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
பணிப்பாளர் சபை சார்பாக அங்கீகரித்து கையொப்பமிடுகின்றேன்.

தலைவர்

பணிப்பாளர்

14.07.2021 ஆந் திகதி
கொழும்பு

அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.
பக்கம் 5 தொடக்கம் 24 வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

உரிமையாண்மையில் கூற்று

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

	Stated Capital	Revaluation Reserve	Retained Earnings	Total
2018 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி (முன்பு தெரிவித்தது)	**502,456,080**	**2,028,858,589**	**2,792,590,448**	**5,323,905,117**
ஒத்திவைக்கப்பட்ட வரியின் அறிக்கையை சரிசெய்தல்			506,307,200	506,307,200
2018 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	**502,456,080**	**2,028,858,589**	**3,298,897,648**	**5,323,905,117**
கடந்த ஆண்டு சீராக்கம்	-	-	(12,800)	(12,800)
ஆண்டிற்கான இலாபம்	-		(34,506,078)	(34,506,078)
ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (குறிப்பு 1)	-	262,930,169	(6,132,395)	256,797,774
பங்கிலாபத்திற்கான ஏற்பாடு	-	-	(15,000,000)	(15,000,000)
2019 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி	**502,456,080**	**2,291,788,758**	**3,243,246,375**	**6,037,491,213**
கடந்த ஆண்டு சீராக்கம்	-	-	10,470,553	10,470,553
ஆண்டிற்கான இலாபம்	-	-	97,993,276	97,993,276
ஏனைய முற்றுமடங்கிய வருமானம்	-	5,493,967	(10,206,319)	(4,712,352)
2020 மார்ச் 31இல் உள்ளவாறான மீதி	**502,456,080**	**2,297,282,725**	**3,341,503,885**	**6,141,242,690**

குறிப்பு I

கடந்த ஆண்டு நிலத்திற்கான ஒத்திவைக்கப்பட்ட வரி கணக்கீடு செய்யப்படவில்லை, இது இந்த ஆண்டு சரி செய்யப்பட்டது, இது மேலே குறிப்பு 1 இல் குறிக்கப்பட்டுள்ளது.

அடைப்புக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவுகளை காட்டுகின்றன.

88 முதல் 130 வரையான பங்கங்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த ஒரு பகுதியாகும்.

காசுப் பாய்ச்சல் கூற்று

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

(இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது)

		2020	2019
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
வரிக்கு முன்னர் இலாபம்		188,443,929	119,782,045
செம்மையாக்கல்கள்			
பெருமானத்தேய்வு		52,382,408	51,673,740
அசையாச் சொத்துக்களை தீர்த்தல்		4,457,400	4,375,244
ஆதனம், பொறி உபகரணங்கள் மீதான விற்பனை (இலாபம்)/நட்டம்		2,289,940	(2,741,263)
வியாபார வருமதிகளின் பாதிப்பு		19,804,991	36,503,462
ஆண்டிற்கான பணிக்கொடை கட்டணம்		10,284,130	8,553,032
வட்டி வருமானம்		(345,946,426)	(433,720,019)
வட்டி செலவுகள்		63,244,126	32,877,346
கடந்த ஆண்டின் சீராக்கல்கள்		10,470,553	(12,800)
தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு நட்டம்		**5,431,051**	**(182,709,212)**
தொக்குகள்		400,734,580	1,583,458,863
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்		585,347,988	(210,087,483)
ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள்		(2,839,143)	3,655,502
வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்		(990,924,834)	3,177,059,150
வைப்புக்கள் மற்றும் முற்பண பெறுவனவுகள்		(104,514,426)	15,607,431
திரட்டப்பட்ட செலவுகள் மற்றும் முற்பணங்கள்		(29,747,059)	44,376,572
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்		**(136,511,844)**	**4,431,360,823**
பணிக்கொடை செலுத்தியது		(11,958,720)	(5,374,943)
வட்டி செலுத்தியது		(63,244,126)	(32,877,346)
வரி செலுத்தியது		(70,451,099)	(67,398,394)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்		**(282,165,789)**	**4,325,710,140**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கையேற்றல்		(15,423,824)	(17,090,457)
அசையாச் சொத்துக்களின் கையேற்றல்		(710,500)	-
நடைமுறை வேலைகள்		-	(236,885)
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான வருமானம்			9,091,100
திறைச்சேரி உண்டியல்/நிலையான சொத்துக்கள் மீதான (வட்டி மறு முதலீட்டுடன்) முதலீடு		(1,211,565,657)	(1,274,090,880)
திறைச்சேரி உண்டியல்/நிலையான சொத்துக்களின் (வட்டியுடன்) திரும்பப் பெறல்		2,317,651,167	2,152,578,325
பெறப்பட்ட வட்டி (வரிகளின் நிகரம்)		345,946,426	430,798,812
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்		**1,435,897,612**	**1,301,050,014**
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாச்சல்			
ஆண்டினுள் பெற்றப்பட்ட கடன்		9,839,059,331	2,823,202,606
செலுத்திய பங்கிலாபம்		-	(15,000,000)
ஆண்டினுள் செலுத்திய கடன்கள்		(10,530,789,713)	(8,774,705,293)
நிதி நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்		**(691,730,383)**	**(5,966,502,687)**
Cash and Cash Equivalents at Beginning of the Year		380,954,088	893,591,786
ஆண்டினுள் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட தேறிய மாற்றங்கள்		**462,001,441**	**(339,742,534)**
ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்		41,211,553	380,954,088
ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்	**(Note 19)**	**503,212,993**	**41,211,553**

அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.
பக்கம் 5 தொடக்கம் 24 வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

நிறுவன தகவல்கள்

1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்

1.1 பொதுவான கொள்கைகள்

அறிக்கையிடும் நிறுவனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி முழுமையாக இலங்கை அரசிற்கு சொந்தமான ISO 9001:2008 சான்று பெற்ற கம்பனியாவதுடன் அது 50 ஆண்டுகளுக்கு அதிகமாக இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற கமத்தொழில் அமைச்சின் விடய பரப்பிற்குரியதாக காணப்படுகின்றது. இலங்கை உரக் கம்பனி இரசாயன உரத்தினை இறக்குமதி செய்தல், தரமான உர கலவினை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல், நாடு முழுவதுமான களஞ்சிசாலை வலையமைப்பின் ஊடாக விநியோகித்தல் மற்றும் அதன் ஊடாக இலங்கை விவசாயிகளின் உர தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக செயற்படுகின்றது.

1987 இன் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரசிற்கு சொந்தமான மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களையுடைய கம்பனியாக மாற்றலின் பிரகாரம் இலங்கை உர கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட இலங்கை உர கம்பனியாக மாற்றப்பட்டது.

இந்த பரிவர்த்தனை 1992 செப்தெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் சட்ட ரீதியாக செயற்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பொது கம்பனியாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் நோக்கமாவது, 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அதன் முற்பதவியாளரான இலங்கை உர கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வியாபாரம் வெற்றிகரமான முன்னெடுத்துச் செல்வதனை உறுதி செய்வதாகும்.

1.2 நிதி ஆண்டு

கம்பனியின் நிதி அறிக்கைகள் அறிக்கையிடும் திகதி மார்ச் 31 இல் முடிவடைகின்றது.

1.3 கம்பனியின் பங்கு மூலதனம்

கம்பனி முழுமையாக இலங்கை திறைச்சேரிக்கு சொந்தமாவதுடன் வழங்கப்பட்டுள்ள பங்கு மூலதனம் ரூபா 10 வீதமான சாதாரன பங்குகள் 50,245,608 ஆகும்.

1.4 உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 388 ஆகும் (2019- 364)

1.5 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி 2020 திசெம்பர் 04 ஆம் திகதி ஆகும்.

1.6 பதிவு அலுவலகத்தின் சட்ட ரீதியான தன்மை மற்றும் முகவரி

இலங்கையினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடைய வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் முழுமையான உரித்து நிதி அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பிரதாக அலுவலகம் லக்பொஹொர ஸ்வர்ன ஜயன்தி வீதீ, ஹூனுபிடிய, வத்தலை, இலங்கையில் அமைந்துள்ளது.

1.7 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டின் தன்மை

கம்பனியின் பொருளாதார அபிவிருத்திக்கு மற்றும் வளர்ச்சிக்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பங்களிப்பொன்று வழங்கிய தமது நாடளாவிய பகிர்வு வலையமைப்பின் ஊடாக கம்பனி வெற்றிகரமாக மற்றும் தொடர்ச்சியாக மக்களுக்கு உரம் பெற்றுக் கொடுத்துள்ளது. அது கரிம உரத்தினை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்கும் முதல் அரச அமைப்பாகவும் கருதப்படுகின்றது.

இணக்க கூற்று

1.8 தொடர்ந்தியங்கல்

முகாமைத்துவத்தினால் தொடர்ந்து இயங்கும் திறன் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொண்டுள்ளதுடன் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்காக வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்கு வளங்கள் காணப்படுகின்றமையை குறித்து திருப்தியடைகின்றது. மேலும், கம்பனிக்கு தொடர்ச்சியாக முன் செல்வதற்கு காணப்படுகின்ற திறன் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சந்தேகமொன்று ஏற்படுத்தக் கூடிய திரவத்தன்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பில் முகாமைத்துவம் அறியாது. எனவே, கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.

1.9 வரிவிதிப்பு

2016 இன் 10 ஆம் இலக்க இறைவரித் சட்டத்திற்கு மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க புதிய இறைவரிச் சட்டத்திற்கு பிரகாரம் வரி நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு வரிவிதிப்பிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்

2.1 தயாரிப்பின் அடிப்படை

(அ) இணக்கக்கூற்று

நிதிக் கூற்றுக்களானது, நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கியது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அளவீட்டு அடிப்படை

தொடர்புடைய குறிப்புக்களின் கீழ் சாதாரண மதிப்பு தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்களை தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமம் (SLFRSs) இற்கு அமைய கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீட்டு செய்வதன் ஊடாக மாற்றப்பட்ட வரலாற்று கிரய மரபின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRSs) அமைவாக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக சில சிக்கலான கணக்கு மதிப்பீடுகள் பயன்படுத்தல் அவசியமாகின்றது. கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் முகாமைத்துவம் தம் தீர்பினை செயற்படுத்தவும் தேவைப்படுகின்றது. உயர் மட்டத்திலான தீர்ப்பு அல்லது சிக்கல்தன்மை அல்லது நிதிக் கூற்றுக்களுக்காக கற்பிதங்கள் மற்றும் மதிப்பீடுகள் தேவைப்படுகின்ற துறை 2.26 குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி நிலைமைக் கூற்றில் பின்வரும் உறுப்படிகள் தவிர கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தினை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்டுள்ள நலன் கடப்பாட்டு பொறுப்பானது வரையறுக்கப்பட்டிருக்கும் நலன் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
- இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் அளவிப்படுவதாவது, கையகப்படுத்தும் போது விலையில் மற்றும் பின்னர் மீள்மதிப்பீட்டு செய்யப்பட்ட பெறுமதியிலாவதுடன், அவை மீள் மதிப்பீட்டு திகதியில் நேரிய மதிப்பில் காணப்படுகின்றது.

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKASs and SLFRSs) பிரகாரம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவையாடுகளின் பிரகாரம், கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் உள்ளவாரான அடிப்படையில் மற்றும் ஏனைய விரிவானதான நேரிய பெறுமதியுடைய காணி, கட்டிடங்கள், முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களை தவிர்த்த வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

வருமானம், முன்வைத்தல் மற்றும் தொழிற்பாட்டு பணம் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படுதல், கம்பனியின் தொழிற்பாடு மற்றும் முன்வைத்தல் இலங்கை ரூபாவில் ஆவதுடன் அது கம்பனி செயற்படுத்தும் பிரதான பொருளாதார சூழலாக காணப்படுகின்றது.

சமமான உருப்படிகளின் அனைத்து பொருட் வகுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக முன்வைக்கப்படும். இலங்கை கணக்கீட்டு நியமம் ஊடாக "நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்" ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்டள்ள பிரகாரம் அசாதாரண தன்மையின் அல்லது தொழிற்பாட்டின் உருப்படிகள் திரவத்தனமையற்றவை தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் தொடர்புடைய தனித்தனி குறிப்புக்களுடன் கலந்துரையாடப்படும்.

ஒப்பீட்டுத் தகவல்கள்

நிகழ்கால் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தெரிவினை மேம்படுத்துவதற்காக மற்றும் இடைக்கால காலப்பகுதி ஒப்பீட்டினை அதிகரித்தலுக்காக நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்து பணதொகையும் தொடர்பாக அனைத்து பணத்தொகைக்காகவும் பொருண்மையான, குறிப்பான மற்றும் விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு ஒப்பிட்டளவான தகவல்கள் கடந்த காலக் பகுதிக்கு தொடர்புடையதாக வெளிப்படுத்தப்படுகின்றது.

கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல் மற்றும் வகையீட்டினை மிகவும் சிறப்பாக சமர்ப்பிப்பதற்கு தொடர்புப்படுகின்ற பிரகாரம் மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடக்கூடிய பிரகாரம் திருத்தப்பட்டுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள பொது துறை கணக்கீட்டு நியமம் I, II மற்றும் III தொகுப்புக்கள் அறிக்கையிடும் போது மற்றும் இந்த நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்காகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியான பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களின் உருப்படிகள் முன்வைத்தல் அல்லது கையீட்டினை திருத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மிகவும் சிறந்த வெளிப்படுத்தலொன்றினை முன்வைப்பதற்காக ஒப்பீட்டு அளவுகளும் நிகழ்காலத்திற்கு ஏற்ப மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே, SLPSAS மற்றும் திறைச்சேரிவழிக்காட்டிகளுக்கு அமைவாக நிலையான சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பங்கு வகைப்படுத்தல்களின் தவறுகள் திருத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் முன்வைத்தல் மற்றும் வகைப்படுத்தலினை மிகவும் சிறப்பாக முன்வைப்பதற்காக தொடர்புடைய பிரகாரம் மற்றும் நடப்பு ஆண்டுடன் ஒப்பிடும் வகையில் திருத்தப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கையின் பொழிப்பு

குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு தொடர்புடைய தனிப்பட்ட குறிப்புடன் அடுத்த பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குறிப்புக்களுடனும் முன்வைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியினால் தொடர்ச்சியான பயன்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள் பின்பற்றல் முக்கியமாக கருதப்படினும் வேறு எந்த பிரிவிலும் வெளிப்படுத்தப்படவில்லை.

நிகழ்கால மற்றும் நிகழ்கால அல்லாத வகைமீடு

நிறுவனம் நடைமுறை / நடைமுறையற்ற அற்ற வகையீட்டின் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வழங்குகின்றது. ஒரு சொத்து நடைமுறையாக கருதப்படுவது அது,

- தேறக்டிய அல்லது விற்பதற்கு அல்லது சாதாரன செயற்பாட்டு சுழற்சியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற போது
- பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக பேணும் போது
- அறிக்கையிடும் காலத்தின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தேறுவதை எதிர்பார்கின்ற போது, அல்லது
- அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் குறைந்தபட்சமாக பன்னிரண்டு மாதங்களுக்காக பொறுப்பொன்று மாற்றப்படல் அல்லது பயன்படுத்துவதனை மட்டுப்படுத்தாவிடின் காசு மற்றும் காசுக்கு சமமான ஏனைய அனைத்து சொத்துக்களும் நடைமுறை அற்ற என வகைப்படுத்தப்பட்டுள்ள போது

ஒரு பொறுப்பு நடைமுறையாகக் கருதப்படுவது. அது,

- சாதாரன இயக்கச் சுழற்சியில் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போது
- பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக பேணும் போது
- அறிக்கையிடும் காலத்தின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படுமென எதிர்பார்கின்ற போது, அல்லது
- அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் குறைந்தபட்சமாக பன்னிரண்டு மாதங்களுக்காக பொறுப்பொன்று தீர்க்கப்படுதலினை பிற்போடுவதற்கு நிபந்தனையற்ற உரித்து இல்லாத போது

கம்பனி ஏனைய அனைத்து பொறுப்புக்களையும் நடைமுறை அற்றதென வகைப்படுத்தப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

2.2 கணக்கீட்டு கொள்கையில் மாற்றம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றமானது, வேறு விதமாக குறிப்பிடப்படவில்லை எனின், நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல் மற்றும் வகைப்படுத்தல், தொடர்புடைய சந்தர்ப்பங்களில் மிகவும் சிறந்த சமர்ப்பித்தலொன்று முன்வைப்பதற்காக மற்றும் நடப்பு ஆண்டில் அவையுடன் ஒப்பிடக் கூடிய வகையில் திருத்தப்பட்டுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காயர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட SLAS பிரகாரம் கணக்கீட்டு நியமம் அறிக்கையிடும் போது மற்றும் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்காகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

நிதிக் கூற்றுக்களில் உருப்படிகள் முன்வைத்தல் அல்லது வகையீடு மிகவும் சிறந்த விதத்தில் முன்வைத்தலுக்காக திருத்தப்பட்டமையும் நடப்பு ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.

2.3 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

2.3.1 தொழிற்பாடு மற்றும் சமர்ப்பிக்கும் அலகுகள்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் நடவடிக்கைகள் ஆரம்ப பொருளாதார சூழலில் காணப்படும் நாணயத்தின் அடிப்படையில் கம்பனியினால் அளவிடப்படுகின்றது. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (LKR) முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவே கம்பனியின் முன்னிலைப்படுத்தும் நாணயமாகும்.

2.3.2 கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

அந்நியநாணயங்களிலானகொடுக்கல்வாங்கல்கள் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நிலவிய நாணய மாற்று வீதத்தில் ரூபாவிற்கு நாணய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக, அந்நிய நாட்டு நாணய பரிமாற்றத்தில் பெற்றவைகள் மற்றும் இழப்புக்கள் மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் திகதியில் வெளிநாட்டு நாணய ஆதிக்கத்திற்கு உட்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களில் பரிமாற்ற வீதங்கள் என்பன விரிவான வருமானக் கூற்றில் கணக்கு வைக்கப்பட்டது. ஆரம்ப கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்திலேயே காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும்.

விரிவான வருானக் கூற்றினுள் காலக்கழிவு மேற்கொண்ட கிரயத்தின் மாற்றங்கள் தொடர்பாக மாற்றல் வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டது.

குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

